# இறையியல் கோலங்கள்

வடிவம் : 5 வண்ணம் : 4



ஜூன் 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI - IYAL KOLANGAL

**Tamil Theological Quarterly**


| வடிவம்: 5 | ஜூன் 1989 | வண்ணம்: 4 |
|---|---|---|


வெளியிடுவோர்


புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகம்
தேசிய குருத்துவக் கல்லூரி
அம்பிட்டியா, கண்டி.
இலங்கை.


(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழு:

**ஆசிரியர் :**

அருள்திரு. சீ. யோ. இம்மானுவேல்

**துணை ஆசிரியர்கள் :**

அருள்திரு. இம்மானுவேல் பெர்னாண்டோ
அருள்திரு. ஜே. நீக்கிலஸ்
அருள்திரு. ஜெறூட் சவரிமுத்து

**விநியோகம் :**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

*Joint Publication of:*

St. Francis Xavier's Seminary
Columbuthurai . Jaffna
Sri Lanka

Gnanapragasar Tamil Academy
National Seminary of Sri Lanka
Ampitiya, Kandy.
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே

பக்கம்

முன்னுரை
அருள்திரு. S. J இம்மானுவேல் 1

1. திருவழிபாடு :
கிறிஸ்தவ வாழ்வின் உச்சியும் ஊற்றும்
அருள்திரு. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் 2

2. வழிபாட்டில் இறைவார்த்தை
திரு. இ. ம. ஜெயசீலன் (மறை ஆசிரியர்) 10

3. வழிபாட்டில் பாடகர் குழாம்களின் பங்களிப்பு
அருள்சகோதரன் சீ. யே. அன்ரனி பாலா 15

4. இரண்டாம் வத்திக்கான் சங்கமும்
திருவழிபாட்டைப் புதுப்பித்தலும்
அருள்சகோதரன் அ. விக்ரர் சோசை 22

5 திருவழிபாடும் அடையாளங்களும்
அருள்திரு. ஜே. நீக்கிலஸ் 27

6. திருவழிபாடும் பக்தி முயற்சிகளும்
திரு. எஸ். ஏ. நாதர் (மறை ஆசிரியர்) 32

*SYNOPSIS*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## வழிபாடு வளர வாழ்வு வளரும்

2ம் உலக யுத்தத்தின்பின் கிறிஸ்தவ ஐரோப்பாவிலே சில மறுமலர்ச்சி இயக்கங்கள் வளர்ந்துவந்தன. அவைகளில் விவிலிய, கிறிஸ்தவ ஒற்றுமை, பொதுநிலை அப்போஸ்தலத்துவம், திருவழிபாடு இயக்கங்கள் (Biblical, Ecumenical, Lay Apostolate and Liturgical movements) முக்கியமானவை. இவைகளின் கூட்டுப்பயனுகத்தான் இந்நூற்றுண்டில் திருச்சபையில் மிகப்பெரும் சம்பவம் எனக் கணிக்கப்படும் 2ம் வத்திக்கான் சங்கம் நிகழ்ந்தது, முக்கியத்துவம் பெற்றது.

இச் சங்கத்தில் கொண்டுவரப்பட்ட திசை திருப்பங்களும் மறுமலர்ச்சி ஆலோசனைகளும், மேற்கூறப்பட்ட ஆயத்த இயக்கங்களில் பங்குபற்றியவர்களுக்கே நிறைவான மகிழ்ச்சியையும், மறுமலர்ச்சியையும் கொடுத்தது.

ஆனல் எம்நாட்டு திருச்சபையைப் போன்ற இளம் திருச்சபைகளில், அவ் ஆயத்த இயக்கங்களோ திருப்பத்திற்கான கோரிக்கைகளோ இருக்கவில்லை. திருவழிபாடு அந்நிய மொழியிலும், அடையாளங்களிலும், சங்கீதங்களிலும் நடைபெற்று வந்த சடங்காகவே இருந்தது. சகலத்தையும் கேள்வியின்றி சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொண்டோம். இந் நிலையில்தான் 2ம் வத்திக்கான் சங்கம் பிறப்பித்த முன்னேற்றமான மாற்றங்கள், எமது முயற்சி எதுவுமின்றி, மடியில் வீழ்ந்த கொடைகளாயின. இவைகளை அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்ருேம். கவர்ச்சியான சில மாற்றங்களை உடனடியாகச் செயல்படுத்திஞேம். ஆனல் திருப்பங்களின் பலாபலனை ஆழமாக அகலமாக அநுபவிக்க இன்னும் பல ஆண்டுகளின் முயற்சி எமக்குத் தேவை.

புதிய திருவழிபாட்டின் கண்ணேட்டத்தையும், கருத்தையும் உணர்ந்து, அதன் உள்ளடக்கத்தையும் உண்மையையும்; உருவத்தையும் தொனியையும் மாற்றியமைத்து, வாழக்கையுடன் சம்பந்தப்படுத்த, பண்பாட்டு மயமாக்க (Inculturation) பல வழிகளிலே முயன்றுகொண்டிருக்கின்ருேம். வழிபாட்டின் சடங்கு, அடையாளம், சயிக்கினை, சங்கீதம் போன்ற பல்வேறு துறைகளில் குருக்களும் பொது நிலையினரும் மறைவல்லுனரும் கலை வல்லுனரும் கலந்து முயற்சிக்க வேண்டும். இவ் வேட்டில் வரும் இறைஇயல் கருத்துக்களும் இம் முயற்சியின் வளர்ச்சியாகவே அர்ப்பணிக்கப்படுகின்றன.

திருவழிபாடு, மறை சிந்தனைகளின் ஊற்றாகவும், மறை வெளிப்படுத்துதலின் சிகரமாகவும் இருக்கின்றது. இதனுல் வழிபாடு வளர மறை வளரும், மறை வளர வாழ்வு வளரும். வாழ்வு வளர இறை அரசு அண்மிக்கும்.

ஆவியின் பெருவிழா 1989 — எஸ். ஜெ. இம்மானுவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு:

# கிறிஸ்தவ வாழ்வின் உச்சியும் ஊற்றும்

**A. J. V. சந்திரகாந்தன்**
(யாழ். பல்கலைக்கழகம்)

இன்று கத்தோலிக்க திருச்சபையின் திருவழிபாட்டு வளர்ச்சியினைப் பின்னோக்கிப் பார்க்கும்போது கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் திருச்சபையின் திருவழிபாட்டு முறைகள், திருச்சடங்குகள் ஆகியன ஒரு புதுமைப் போக்குடனும் சமுதாய நோக்குடனும் முன்னேறி வருவதனைக் காண்கிறோம். குறிப்பாக, இரண்டாம் வத்திக்கான் சங்கம் முடிவுற்ற காலமுதல் (1965) இன்றுவரை வரையிலாக கிறிஸ்தவ வழிபாடு பன்னிலைப்பட்ட மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டது என்பது கண்கூடு. வழிபாட்டின் வழியாக வாழ்வுநெறி தழைக்கவும் நாளாந்த வாழ்வின் ஏனைய சமுதாய அம்சங்கள் ஏற்றம் பெறவும் இப்புதிய மாற்றங்கள் ஏதுவாய் அமைந்தன. ஆயினும், திருவழிபாட்டிற்கும் இவ்வழிபாட்டில் ஆவலோடு பங்குபற்றி "அருள்பெற"முனையும் பக்தர்களின் நாளாந்த வாழ்விற்கும் இடையிலான நெருக்கமும் தொடர்பும் பெருமளவில் பேசாப்பொருளாகவே இருந்து வருகிறது. கடந்த இரு தசாப்தங்களிலும் புகுத்தப்பட்ட மாற்றங்கள், திருவழிபாட்டின் சடங்குகளைச் சரிசெய்து மெருகூட்டுவதிலும், மண்வாசனைமிக்க கலாச்சார அம்சங்களை ஆங்காங்கே இணைப்பதிலும் உரோமை-இலத்தீன் மூல நூல்களை மொழிபெயர்ப்பதிலும் ஒரு சில வழிபாட்டு அனுசாரங்களைப் பண்பாட்டிற்கு ஏற்ப "தழுவி" அமைப்பதிலுமே கரிசனையாகவிருந்தன. இக் காலத்திலேதான் திரு இசைப்பாடல்கள் புதுப்பொலிவுடன் எழுதப்படலாயின. பண்பாட்டுடன் இசைக்க இசைக்கருவிகள் ஆலயத்தின் திருவழிபாட்டின் பாவனைக்கான அங்கீகாரம் பெற்றன. இவையனைத்தும் கிறிஸ்தவ வழிபாட்டினில் ஞான உணர்வைத் தூண்டவும் பக்திப் பரவசத்தைப் பலப்படுத்தவும் ஓரளவில் உதவின எனலாம்.

கிறிஸ்தவ வழிபாட்டிற்கு புத்துணர்வும் புதுவேகமும் கொடுத்த இம்மாற்றங்கள் வழிபாட்டை ஆன்மீக வயப்படுத்தலிலே அதிக கவனம் செலுத்துகின்றன. "பக்தியோடு பண்ணிசைத்துப் பரமனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவோம்'' என்ற போக்கிற்கமைய இறைவனைத் தொழுதலும் அவருக்குத் தொண்டு செய்தலுமே திருவழிபாட்டின் பொதுவான குறிக்கோளாகக் கொள்ளப்படுகின்றது. இதற்கேற்ப செபவாழ்வு, தப வாழ்வு, தியானயோகம், திருப்பணி என்று ஆன்மீக சார்புடைத்தான செயற்பாடுகள் ஒரு புறமும் ஏனையவை உலக வாழ்வை ஒட்டிய செயற் பாடுகள் என்றும் பிரித்து வேறுபடுத்தப்படுகின்றது. இரண்டாம் வத் திக்கான் சங்கத்தின் திருவழிபாடுபற்றிய கொள்கைத்திரட்டின் கருத்து நிலைநின்று இன்றைய திருவழிபாட்டு முறைமைகளை பரிசீலனைசெய்யும் போது; அச்சங்கத்தின் தீர்க்கதரிசன வீச்சும், முற்போக்குக் கோட் பாடுகளும் வாழ்வை ஒட்டிய ஆன்மீகப்போக்கும் இன்னமும் செய லுருப் பெறுமலிருப்பதை அவதானிக்கலாம். இதுதவிர, நிறைவான வழிபாட்டிற்கு ஆதர்ஷமாக அமைய வேண்டிய அன்றாட வாழ்வின் அடிப்படை நிலைகள் இன்னமுமே வழிபாட்டுடன் அர்த்தமுள்ள வகை யில் இரண்டறக் கலவாதிருப்பதனையும் உணரலாம். திருவழிபாட்டை யும் வாழ்வையும் ஒன்றிணைத்துக் கருத்துத் தெரிவிக்கும்போது 2ம் வத். சங்கம் பின்வருமாறு கூறுகிறது. ''திருவழிபாடு இறைமக்களின் வாழ்வின் சிகரமாகவும் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் ஊற் றுகவும் உள்ளது.''[1] இறைமக்களின் வாழ்வு, திருச்சபையின் ஆற்றல் ஆகிய பதங்கள் இங்கு கூர்மையாக நோக்கப்பட வேண்டும். இடை விடாது வளரும் உலக சமுதாயத்தின் உயிரூட்டமுள்ள ஓர் அருட் சாதன அங்கமாகத் திருச்சபை நிகழ்வதனால் இப்பதங்கள் வாழ்விய லின் பரிணும நிலைநின்று பரிசீலிக்கப்பட வேண்டும். திருவழிபாட்டியல், திருச்சபையின் வரலாற்றியல், சமகால இறையியல் ஆகிய துறை களின் துணையோடு திருச்சங்கப் படிப்பினைகளின் ஒளியியல் வாழ்விற் கும் வழிபாட்டிற்குமுள்ள தொடர்புகளை இனங்கண்டு ஒப்பியல் ரீதி யில் விளக்குவதன்மூலம் இதனைத் தெளிவுபடுத்தலாம் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. வாழ்வும் வழிபாடும் — அன்றும் இன்றும்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முற்பட்ட காலத்தில், கிறிஸ்தவ வழிபாடானது திருச்சபை இறைவனுக்கு ஆற்றும் ''தொண்டு'' அது இறைவன்பால் மனிதனுக்குள்ள ''கடமை'' எனும் கருத்துக்களே அழுத்திக் கூறப்பட்டன. உதாரணமாக சுவாமி வ. தியோகுப்பிள்ளை ஆக்கிய, ''மாணவர் கிறிஸ்தவ போதகம்'' என்ற நூலின் மூன்றுவது காண்டம் ''கிறிஸ்தவ வழிபாடு'' என உபதலைப்பிடப்பட்டுள்ளது. திருவழிபாட்டின் பல்வேறு அம்சங் களையும் தன்மைகளையும் விசுவாச அடிப்படைகளையும் ஆய்ந்து விளக் கும் இந் நூலில், வழிபாடானது திருச்சபையின் ''தொண்டு'' ''கடமை'' எனும் கருத்துக்களே அழுத்திக் கூறப்படுகின்றன.[2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், அப்போது வழக்கிலிருந்த பழைய திருச்சபையின் சட்டத் தொகுப்பு நூலின் அடிப்படையில் திருவழிபாட்டின் வெளி அடையாளத் தன்மை, சடங்கு முறைமை, சட்ட நீதிச்சார்பு, திரு ஆட்சி வரைமுறைகள் ஆகியன மிகைபடுத்திப் பேசப்பட்டன. இந் நிலையில் வாழ்விற்கும் வழிபாட்டிற்குமுள்ள தொடர்பு மங்கலாகவே விளக்கப்பட்டது. ஆயினும் வழிபாட்டின் சமூகத் தன்மைபற்றியும் அதன் வாழ்வியல் சிறப்பியல்புபற்றியும் இந் நூலாசிரியர் கூறுவது நுனிந்து நோக்கத்தக்கது.

> ''திருவழிபாடு தேவ வழிபாட்டிற்குரிய வெளியரங்க சடங்குகளில் மட்டும் தங்கியிருக்கின்றது என்று எண்ணுதல் பெருந் தவறாகும். இன்னும் இறைவழிபாட்டை ஒழுங்குபடுத்தும்படி திருச்சபையால் விதிக்கப்பட்ட சட்ட திட்டங்களின் தொகுப்பே திருவழிபாடு என்று எண்ணுவதும் தவறாகும். நமது மனமும் இருதயமும் தேவன் பக்கமாய்த் திரும்பி உத்தம வாழ்வைத் தேடாவிடின் அவரை நாம் தகுந்த முறையில் மகிமைப்படுத்த முடியாது என்பது வெளிப்படை.'' 3

சட்டத்தையும் சடங்கையும் கடந்த நிலையில் உத்தம வாழ்விற்கு உயிரூட்டம் தருவதே வழிபாட்டின் தலையாய நோக்கு என்பதை ஆசிரியர் இங்கு இரத்தினச் சுருக்கமாகக் கூறிவிடுகின்றார்.

வாழ்விற்கும் வழிபாட்டிற்கும், ஆன்மீகத்துறைக்கும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கும், பக்தி முயற்சிகளுக்கும் பன்முகப்பட்ட வாழ்வியல் வளர்ச்சிக்கும் இடையிலே நிலவவேண்டிய பரிச்சயமும் பலமான உறவும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் பலமுறை விளக்கப்பட்டுள்ளன. 4 பொதுவாக நோக்குமிடத்து இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வழிபாட்டை ஒட்டி வளர்ந்த பல இயக்கங்களின் பரிணும நிறைவே இச் சங்கத்தின் படிப்பினைகளுக்கு அடிகோலின எனலாம்.

## 2. வாழ்வும் வழிபாட்டு இயக்கங்களும்

*1903* ஆம் ஆண்டிலே, *10* ஆம் பத்திநாதர் பாப்பரசர் திரு இசைபற்றி எழுதிய திருமடல் ஒன்றில் வழிபாட்டில் இறைமக்கள் ஆர்வத்தோடு பங்குபெறவேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்றார். இதே பாப்பரசர் சில ஆண்டுகளின் பின், அடிக்கடி திருப்பலியில் திருநன்மை உட்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தி அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கினுர். *1909* இல் பெல்ஜியம் நாட்டில் கத்தோலிக்க மகாநாடு ஒன்று இடம்பெற்றது. இந்நூற்றாண்டில் வழிபாட்டில் ஏற்பட்ட அனைத்து மாற்றங்களுக்கும் இந்த மகாநாடே வித்திட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினுல் மிகையாகாது. வழிபாட்டின் வழிநின்று வாழ்வியல் முறைமைகள் மாற்றப்படவேண்டுமென்றும், வழிபாட்டின் துணையோடு விசுவாச வாழ்வும் அருள் வாழ்வும் ஆன்மீக ஆர்வமும் ஆழப்படுத்தப் படவேண்டுமென்றும் இம் மகாநாடு அறைகூவல் விடுத்தது. இதற்கு ஏதுவாக திருப்பலிச்சடங்கு நூல் தாய்மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்றும் பக்திமுயற்சிகள் பாரம்பரிய வணக்கங்கள் என்பன புதுப்பிக்கப்பட்டு வாழ்வோடு இணைந்த நிலையில் வளர்க்கப்படவேண்டு மென்றும் அப்போதே அறிவுரை கூறப்பட்டது. மனித வாழ்க்கையின் மகத்துவம் பேணுத ஆராதனைகளும் வாழ்விற்கு வளமூட்டாத வணக்க முயற்சிகளும் சாரமற்றவை எனக் கருதப்பட்டன. பழைய நியம முறைகள் மறைந்து வாழ்வியல் சார்ந்த புதிய நியம முறைகள் வளர்வதற்கு ஏதுவாக திருவழிபாட்டியல் பற்றிய பிரசுரங்களும் மாத சஞ்சிகைகளும் வெளிவர ஆரம்பித்ததும் இம்மகாநாட்டின் பின்பேதான்.

திருச்சபை கிறிஸ்துவின் திருஉடல் என்ற விவிலிய உருவகத்திற் கமைய வழிபாட்டின்மூலம் திருச்சபை என்ற குழுமத்தின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் வளர்க்கப்படவேண்டுமென்ற கருத்தை இத் திருவழி பாட்டியக்கம் முன்வைத்தது. இதற்கு அமைய திருப்பலி சடங்கு முறைமைகள் புதுப்பிக்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டது. பழைய மரபுவழிச் சடங்குகளைப் புனருத்தாரணம் செய்யாமல் புதிய முறை மைகளைப் புகுத்துவதனுல் உயிருள்ள திருச்சபையின் வழிபாடு உயி ரூட்டம் தருவதாக அமையுமென அறிவுரை வழங்கப்பட்டது. பல எதிர்ப்புகளின் மத்தியிலும் பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளில் பங்குத்தள ரீதியிலும் பங்கு மக்கள் மனத்திலும் இவ்வியக்கம் கணிச மான செல்வாக்கு உடையதாய் விளங்கியது.

இரண்டு பெரிய உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் திருவழிபாட்டு இயக்கத்தின் புதுமைப்போக்கு ஜேர்மன் நாட்டைச் சார்ந்த கத்தோலிக்க சிந்தனையாளர் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இங்கு இவ்வியக்கம் புதிய வேகமும், வலுவும் பெற் றது. இதன் விளைவாக இறையியல் அறிஞர்களும் குருக்களும் துறவி யரும் இறைவழிபாட்டின் இயல்பில் அதீத அக்கறையும் ஆர்வமும் காட்டினர். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த காலத்தில் திருவழி பாட்டு மறுமலர்ச்சிப் போக்கு ஜேர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளில் பெருமளவிலான பரந்த கிறிஸ்தவ வாழ்வையொட்டிய வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தது.

ஆசியப் பெருங்கண்டத்தில் ஏற்பட்ட திருவழிபாட்டு மறு மலர்ச்சிக்கு வேறுபல காரணிகள் உந்துசக்தியாக வந்தமைந்தன. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்விளைவாக முகிழ்த்த தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வும், சுய மொழி, மறைபற்றி எழுந்த ஆர்வமும் சுய கலாச் சாரப் பொது உணர்வும் ஆசிய கத்தோலிக்க சமூகங்களுக்கு ஒரு புதிய சவாலாக அமைந்தன. மேற்கூறப்பட்ட வழிபாட்டு மறுமலர்ச்சி இயக்கமும் ஆசிய திருச்சபையின் அல்லல்களும் ஒருமித்த விசையோடு வத்திக்கான் சங்கத்தில் சங்கமித்து வழிபாடுபற்றிய இச் சங்கத்தின் நோக்கையும் போக்கையும் ஆரோக்கியமான திசைக்கு இட்டுச்சென்றன.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திலேதான் ஆன்மீக வாழ்விற்கும் வழிபாட்டிற்கும் இடையிலான இணைப்பும் பிணைப்பும் தெளிவுபடுத்தப்பட்டது. வழிபாட்டில் புகுத்தப்பட்ட மறுமலர்ச்சி ஆன்மீக வாழ்வைத் துரிதப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் சடங்குகள், சட்டங்கள் பக்தி முயற்சிகள் பழமை வாய்ந்த வணக்க முறைகள் ஆகியன புதுமையுணர்வுடன் மாற்றி அமைக்கப்பட்டன. கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை மையமாக்கி யாக்கப்பட்ட வழிபாடு பற்றிய கொள்கைத்திரட்டில் இப் பாஸ்கா மறைபொருள் எங்ஙனம் எமது வாழ்வுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்து விதந்துரைக்கப் பட்டது.

> ''விசுவாசிகளிடையே கிறிஸ்தவ வாழ்வை
> நாளுக்கு நாள் வளம்படுத்த வேண்டும்'' [5]

என்ற நல்லெண்ணத்துடன் ஆரம்பமாகும் இக் கொள்கைத் திரட்டு ''கிறிஸ்துவின் மறைபொருளையும் உண்மைத் திருச்சபையின் சரியான இயல்பையும் தம் வாழ்வின் வழியாக விசுவாசிகள் மற்றவர் களுக்கு வெளிப்படுத்த திருவழிபாடு மிகச் சிறந்த முறையில் பயன் படவேண்டும்'' [6] என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. எனவே வாழ்விற்கும் வழிபாட்டிற்கும் இடையிலான தொடர்பை இனங்காட்டு வதற்கு திருவழிபாட்டின் அடிப்படைகளை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். இக் கருத்தினை இங்கு விளக்குதல் நலம்.

## 3. வாழ்வும் வழிபாடும் இணைவதற்கான ஏதுக்கள்

வாழ்விற்கும் வழிபாட்டிற்கும் இடையிலான பிணைப்பு திருச் சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே பேணப்பட்டு வந்த தலையாய அம்சங்களுள் ஒன்று. இதற்கான அடிப்படைகள் கிறிஸ்துவின் சிலுவைப் பலியினை ஒட்டியதாகும். கல்வாரி மலையினில் சிலுவையில் பலியான அவர் அங்கு ஒரு சடங்கினை நிகழ்த்தவில்லை. பலிப்பொருளாகவும் பெருங்குருவாகவும் அவரை ஏற்றுப்போற்றிய முதல் கிறிஸ்தவர்கள் அவருடைய சிலுவை மரணமும் உயிர்ப்பும் அடங்கிய பஸ்கா மறை பொருளில் வாழ்வும் வழிபாடும் இரண்டறக் கலந்த நிலையினைக் கண் டார்கள். இந்த இணைப்பின் ஒளியிலேதான் புனித சின்னப்பரின் வழி பாடுபற்றிய அறிவுரைகள் அர்த்தமும் அழுத்தமும் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ''உங்கள் உடலைக் கடவுளுக்கு உகந்த பரிசுத்த பலியாகவும், உயிருள்ள பலியாகவும் ஒப்புக்கொடுங்கள். இதுவே நீங்கள் செலுத்த வேண்டிய ஆன்மீக வழிபாடு'' (உரோ 12 : 1-2)

என்று புனித சின்னப்பர் அறிவுரை கூறினார். உடல் என்ற பதம் இங்கு வாழும் மனித ஆளுமையின் முழுமையை சுட்டி நிற்கின்றது. எமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட மீட்பு ஒரு சடங்கினை நிறைவேற்று வதனால் பெறப்பட்டதல்ல. மாறாக ஒரு மகத்தான செயலினால் உலக வரலாற்று நியதிகளோடு ஒத்த நிலையில் தரப்பட்டதென்பதையே இங்கு புனித சின்னப்பர் வலியுறுத்துகின்றார். வாழ்வே வழிபாடாக அமைந்த ஒரு வசீகரச் சிறப்பு ஆதிக் கிறிஸ்தவர்களிடத்தே வதிந்தமை யால்தான் அவர்களை அரச குருத்துவக் திருக் கூட்டமென்றும் இறை வனின் குருகுலமென்றும் அப்போஸ்தலர்கள் தயக்கமின்றி அழைத் தார்கள் (1 இரா 2 : 5, 17; பிலிப் 2 : 17, 4 : 18). உண்மையிலேயே மூன்றும் நூற்றாண்டுவரை ஆதித் திருச்சபையினர் கோவில், பீடம் போன்றவற்றை வழிபாடுகளுக்கு உபயோகித்தார்கள் என்பதற்கான சான்றுகளைக் காண்பது மிகவும் அரிது. இறைவனின் வருகையை, விரைவில் எதிர்பார்த்திருந்தமையினாலும் அவர்களின் அன்றாட வாழ்வே ஓர் ஆராதனையாக அமைந்திருந்தமையாலும் ''உண்டாலும் குடித் தாலும் எச்செயலைச் செய்தாலும் அதை ஆண்டவரின் மகிமைக்காக அர்ப்பணித்தமையாலும்'' (1 கொரி 10 : 31) அங்கு வழிபாடு, வாழ்வு என்ற வேறுபாடு கருத்தற்றதாயிற்று.

கிறிஸ்தவ விசுவாசம் வாழ்வின் செயல்களினால் துலங்கவேண்டிய உயிரூட்டமுள்ள இறைவனின் கொடை. விசுவாசம் வழிபாட்டினுள் மட்டும் ஓடி ஒதுங்கிவிடுமாயின் அது உயிரற்றதாகிவிடும். ஆலயத்தின் அமைதிச் சூழ்நிலையில், ஆராதனைகளின் அந்தரங்கத்தில் விசுவாசம் அடக்கப்பட்டுவிடுமாயின் அது வாழ்வையும் வரலாற்றையும் ஊடுருவி உணர்வூட்ட முடியாது. அத்தகைய விசுவாசம் கருவும் கருத்தும் அற்றதாகிவிடும். விசுவாசம், வாழ்வு, வழிபாடு ஆகிய இம்மூன்றும் ஒன்றையொன்று ஏந்தியும் இயக்கியும் வரும்போதுதான் வாழ்விற்கும் வழிபாட்டிற்குமிடையில் ஒருவித நிறைவும் மேன்மையும் கிடைக்கின் றது. விசுவாசத்தால் வாழ்வும், வாழ்வின் முழுமையால் வழிபாடும் வளம்தர வளரும் சக்தி பெறுகின்றன.

## 4. இன்றைய சூழ்நிலையில் வாழ்வும் வழிபாடும்

> புது வானம் பூமி செய்வோம்
> அற வாழ்வில் அமைதி காண்போம்
> ஒன்றே குலமென நாம் இணைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வார்த்தைகள் வழிபாட்டுப் பாடல்களாக இன்று எம் ஆலய விழாக்களில் எதிரொலிப்பது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. இங்கு புதுமைவேண்டி புதுவுலகம் காணப் புறப்படும் ஒரு சமுதாயத்தின் உயிரூட்டமுள்ள தொனியையே கேட்கிறோம். புதுமை உணர்வோடு செயலூக்க வேட்கையும் ஒன்றிணைந்து வழிபாட்டின் வாயிலுக்குள் நுழைவதைக் காண்கிறோம். திருவழிபாடு கிறிஸ்தவ வாழ்க்கையின் உச்சியும் ஊற்றுமென்று குறிப்பிடுகின்றபோது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் வாழ்விற்கும் வழிபாட்டிற்கும் இடையிலான இணைப்பை இரத்தினச் சுருக்கமாக கூறிவிடுகின்றது.

கிறிஸ்தவ வழிபாடு, குறிப்பாகப் திருப்பலி எனும் பொது வழிபாடு, கிறிஸ்தவ வாழ்வு என்னும் செயல்நிலை வழிபாட்டின் சிகரம். அன்றாட வாழ்வின் அவலங்களும், ஏக்கங்களும் வாழ்வை வலுவிழக்கச் செய்யும் தனி மனித, சமூகப் பிரிவினைகளும், பிளவுகளும் வாழ்வின் வசந்தத்தை வறட்சியடையச் செய்யும் மனிதாபிமானமற்ற சுரண்டல்களும் சூதுவாதுகளும், இன மத ஒடுக்கல்களும், பொருளாதார அநீதிகளும் அந்த (கல்வாரி) உச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனப்பலியாக அழிக்கப்பட வேண்டும். அந்த உச்சியில் இருந்தும் புறப்படும் அருள் ஊற்றில் இவை கழுவப்பட்டு புனிதமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் திருப்பலி எனும் திருவழிபாடு ஓர் மகிழ்ச்சியான; மரணத்தின் அழிவின் கொடூரங்களை முறியடித்த — உயிர்த்த கிறிஸ்துவின் மகத்தான வெற்றியில் நாமும் பங்குபெறும் ஓர் விசேஷ கொண்டாட்டமாக அமையும். Eucharistic Celebration - திருப்பலிக் கொண்டாட்டம் ஓர் சந்தோஷகரமான வாழ்வு தரும் செயலாக அமையும்.

திருப்பலியும், திருவருட்சாதனங்களும் ஏனைய திருவழிபாட்டு அங்கங்களும் திருச்சபையின் அழகு சாதனங்கள் அன்று. அவை இவ்வுலகின் ஒளியாகவும் மீட்பின் அருட்சாதனமாகவும் துலங்கும்படிக்கு அழைக்கப்பட்டுள்ள திருச்சபை எனும் மக்கள் கூட்டத்திற்கு இறைவனால் மனமுவந்து அளிக்கப்பட்ட ''அருள்நிறை'' அடையாளங்கள். எனவேதான் இத்திருவழிபாடுகளைப் பொது வழிபாடெனக் கொண்டு செயற்பட்டுவரும் திருக்கூட்டத்தினர் தமது தனிப்பட்ட, சமுதாய, குழும வாழ்வில் மாற்றத்தின் தேவையினை உணர்ந்தும் புதுப்பித்தலின் முக்கியத்தினைப் பேணியும் வாழ்வுநிலையில் என்றுமே இறைவனுக்கு ஏற்புடைய புதிய மனிதராக, புதிய சமுதாயமாக மாறும் தன்மையினையும் பெறவேண்டும்.

தாம் புதுப்பிறப்பாக மாறியதன் நிறைவை சமுதாய ஈடுபாடுகளால், சமூக உறவுகளைப் புதுப்பிக்கும் வேட்கையினால் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். ஒரு சமுதாயத்தின் தீய சக்திகளை எதிர்த்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடவும், 'மனிதாதய மதிப்பீடுகளை மாண்புறச் செய்யவும் மனித மாண்புகளை மிதித்து வருவோரை எதிர்த்து மாற்றவும் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

வாழ்வைவிட்டு ஒதுங்கிய நிலையில் பக்திப் பரவசங்களின் அந்தரங்கத்தில் செலுத்தப்படும் வழிபாடு முழுமையான கிறிஸ்தவ வழிபாடாக அமையாது. வாழ்வோடும் வளம்பெற இணைந்து வாழ்வின் கூறுகளை வலுவடையச் செய்து வாழ்வின் வழுப்பட்ட நிலைகளை அகற்றி வாழ்வுக்கு உகந்தவற்றை வரவேற்று வளமுடைத்தாக்கும் வழிபாடே கிறிஸ்தவ சீவியத்தின் வற்றாத அருள்நதியாக அமையும்.

## பின் குறிப்புகள்

1. காண்க சங்க ஏடுகள், தூயசின்னப்பர் இறைஇயல் கல்லூரி, (திருத்திய பதிப்பு 1988) திருச்சி, 1988, பக். 10-)

2. காண்க சுவாமி வ. தியோகுப்பிள்ளை, மாணவர் கிறிஸ்தவ போதகம், மூன்றும் காண்டம, கிறிஸ்தவ வழிபாடு, அர்ச். சூசைமா முனிவர் அச்சகம், யாழ்ப்பாணம், 1963, பக். 16–18.

3. மாணவர் கிறிஸ்தவ போதகம் ...... பக். 23.

4. சங்க ஏடுகள், பக். 9–13, 122–124, 154–156, 554–555.

5. சங்க ஏடுகள், பக். 8

6. சங்க ஏடுகள், பக். 9.

---

"திருவழிபாட்டில், மிகச் சிறப்பாக திவ்விய நற்கருணைப் பலியில் நமது மீட்பு அலுவல் நடந்தேறுகிறது. கிறிஸ்துவின் மறைபொருளையும் உண்மைத் திருச்சபையின் சரியான இயல்பையும் தம் வாழ்வில் வழியாக விசுவாசிகள் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த இந்தத் திருவழிபாடு மிகச் சிறந்த முறையில் பயன்படுகிறது.

திருவழிபாடு. கொள்கைத்திரட்டு (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாட்டில் இறைவார்த்தை

திரு. இ. ம. ஜெயசீலன் (மறை ஆசிரியர்)

**வா**ர்த்தை மனுவுருவானார் : நம்மிடையே குடிகொண்டார் (அரு. 1: 14). வார்த்தையின்றி செயல் பொருள்பெற முடியாது. இதற்கு அடிப்படையாக இருப்பது மனுவுரு எடுத்த இறை வார்த்தை. யேசுவில் வார்த்தையும் செயலும் நெருங்கிய விதத்தில் செயல்பட்டன. இறைவனின் பிரசன்னம் வார்த்தையான யேசு. ''கடவுள் நம்மோடு''— யேசுவின் வாழ்வும் செயலும் ஆற்றிய அருங்குறிகளும் அவரது போதனையைத் தெளிவுபடுத்தின அதற்கு முழுவடிவம் கொடுத்தன.

திருவழிபாடு கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. திருவழிபாடுகளினூடாக குறிப்பாக அருட்சாதனங்கள் மூலமாக கிறிஸ்து மக்கள் மத்தியில் பிரசன்னமாகிறார், அவர்களுடன் உறவு கொள்கிறார். உயிர்த்த கிறிஸ்து தம் சீடர்களுக்குக் கொடுத்த கட்டளை ''நீங்கள் உலகமெங்கும் சென்று நற்செய்தியினை அறிவியுங்கள்'' (மாற்கு 16: 16) என்பதாகும். திருச்சபை இந்த நற்செய்தி அறிவிக்கும் பணியையே தலையான கடமையாகக் கொண்டு நற்செய்தியை பறைசாற்றியது. ஆனால் அது போதிப்பதோடு நின்றுவிடவில்லை. போதனையூடாக ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பியது. 'எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள்'' (மத். 28: 19) என்று யேசு கூறியதற்கு இணங்க போதனையை கேட்டசிலர் மனம்மாறினார்கள். மனமாற்றம் பெற்றோருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டு தம்மோடு சேர்த்துக்கொண்டார்கள் சீடர்கள்.

இப்படியாகப் பிறந்த புதிய சபை ஒன்றுகூடி இறைவனை வழிபடத் தொடங்கியது. அங்கு இறைவார்த்தை முதலிடம் பெற்றது. போதிப்பதும் திருவழிபாடு நிகழ்த்துவதும் திருச்சபையின் இன்றைய பணியாகும். திருமறை நூலிலிருந்தே போதிக்கும் திருப்பணி நன்கு ஊட்டம் பெற்று புனிதமான முறையில் வளம் பெறுகிறது (சங். ஏடு இறைவெளிப்பாடு எண் : 24).

திருமறைநூல் ஒரு தனி மனிதனுக்கோ சமூகத்துக்கோ உரிய நூல் அன்று. அது திருச்சபைக்குரிய நூல். திருச்சபை திருவழிபாட்டில் பிரசன்னமாகிறது — செயல்படுகிறது. இறைபணி நிகழ்ச்சிகளிலே திருமறை நூல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், திருமறை நூலில் இருந்து வாசகங்கள் படிக்கப்பெற்று திருவுரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்படுகின்றன, சங்கீதங்கள் பாடப்படுகின்றன. மன்றாட்டுகளும் செபங்களும் இறைபணிப் பாடல்களும் திருமறை நூலில் இருந்துதான் ஏவுதலும் தூண்டுதலும் பெறுகின்றன. திருமறை நூலிலிருந்தே இறைபணிச் செயல்களும் குறிகளும் தம் பொருளைப் பெறுகின்றன (சங். ஏடு இறைபணி எண் : 24).

## திருப்பலியில் இறைவார்த்தை

திருவருட்சாதனங்கள் அருட்கருவிகள் ஆகிய அனைத்தும் வழிபாட்டு நிகழ்ச்சிகள். இவற்றுள் தலைசிறந்தது நடுநாயகம் திருப்பலிப் பூசை. திருப்பலியில் நாம் இறைவனுக்கு ஆராதனை செலுத்துகிறோம் இறை வார்த்தையைக் கேட்கிறோம், அதற்குரிய விளக்கத்தையும் பெறுகிறோம். இறைமக்களோடு ஒன்றித்து இறைவனுக்கு நம் விசுவாசத்தினூடாக கிறிஸ்துவின் பெயரால் கிறிஸ்துவோடு கிறிஸ்துவில் நம்மையும் பலியாக்குகிறோம். பலியில் நாம் பங்குகொள்ளும்போது அவருடைய வார்த்தையைக் கேட்கிறோம், இறைவனோடு ஒன்றிக்கிறோம்.

படைக்கவும், அழிக்கவும், வாழ்விக்கவும் ஆற்றல்பெற்ற இறைவார்த்தையே இறைமக்களை உருவாக்கி ஒன்றுபடுத்துகிறது, இறைவனோடு உறவுகொள்ளச் செய்கிறது. இறைவன் சீனாய் மலையில் மக்களோடு பேசியதுபோல் இன்று திருப்பலியிலே நம்முடன் பேசுகிறார். இறைவார்த்தைக்குச் செவிகொடுக்கும் நாம், அதை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்து உலகிற்கு ஒளியாக, உப்பாகத் திகழுவோம் என்பதற்கு ''ஆமேன்'' என்று பதில் கூறுகிறோம்.

பூசையின் பிறப்பிடம் திருமறை நூல். ஏன் திருவழிபாடு அனைத்தின் பிறப்பிடமே திருமறை நூல்தான். திருப்பலிப் பூசையில் இறைவார்த்தை முழங்கப்படுகின்றது. எனவே, ஞாயிறு, கடன்திரு நாட்களில் திருமறை நூலில் இருந்து மூன்று வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. ஒரு சாதாரண கிறிஸ்தவன் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக ஞாயிறு திருப்பலியில் பங்குகொண்டு வாசகங்களை கேட்டுவந்தால் அவன் ஏறக்குறைய திருமறை நூல் முழுவதையுமே கேட்டவனாகிறான். இதற்கமையவே திருச்சபை மூன்று ஆண்டுகளுக்குத் திருமறை நூலைப் பிரித்து விசுவாசிகள் கேட்க வாசிக்கும்படி பணித்திருக்கிறது.

திருவழிபாட்டு ஆண்டு காலத்தில் வரும் சிறப்பான காலங்களில் அதாவது திருவருகை காலம், யேசுவின் பிறப்புக்காலம், தபசுகாலம், பாஸ்காக்காலம் போன்ற காலங்களில் வரும் சாதாரண நாட்களில் காலத்திற்கு ஏற்ற வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. இது ஆண்டுக்கு ஆண்டு மாற்றமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருகைக் காலத்தில் மெசியாவின் வருகையோடு ஒட்டிய இறைவாக்குகளிலிருந்தும் நற்செய்தியிலிருந்தும் வாசகம் எடுக்கப்படுகிறது. தபசுகாலங்களில் மனமாற்றத்தோடு ஒட்டிய வாசகங்களும், பாஸ்கா காலத்தில் யேசுவின் உயிர்ப்பைப்பற்றிய சிறப்பாக அப்போஸ்தலர் பணியிலிருந்து அவர்களின் நற்செய்தி அறிவிப்புப் பணிபற்றிய வாசகங்களும் வாசிக்கப்படுகின்றன.

திருச்சபை என்றும் நம் ஆண்டவரின் திருஉடலைப் போலவே திருமறை நூலையும் வணங்கிவந்திருக்கிறது. ஏனென்றால் இறைவார்த்தையையும் கிறிஸ்துவின் உடலையும் பரிமாறும் பந்தியிலிருந்துதான் முக்கியமாக இறைபணியின் வழியாக வாழ்வின் அப்பத்தை இடைவிடாமல் விசுவாசிகளுக்கு அளித்துவருகிறது. (சங். ஏ. இறைவெளிப்பாடு எண் : 21).

## அருட்சாதனங்களில் இறைவார்த்தை

அருள்வாக்கின்றி அருட்சாதனம் இல்லை. அருட்சாதன வழிபாடு அருள்வாக்கு வழிபாட்டைத் தொடர்ந்துதான் நிகழும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு பெரியசனி பாஸ்காத் திருவிழிப்பு வழிபாடுதான். அன்றைய வழிபாட்டில் நீண்ட வாசகங்களின் பின்தான் ஞானஸ்நான வாக்குறுதி புதுப்பித்தலும் ஞானஸ்நானமும் நடைபெறுகிறது. அதைத்தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

இன்று அருட்சாதனக் கொண்டாட்டங்களில் சிறப்பாக அந்தந்த அருட்சாதனங்களின் சிறப்பையும் கருத்தையும் விசுவாசிகள் அறியக்கூடிய வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. இன்னும் தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் அருட்சாதனங்களின் போதும் (திருமுழுக்கு, நோயில் பூசுதல்) திருமறை நூலில் இருந்து வாசகங்கள் வாசிக்கப்படவேண்டும் என்று இறைபணியாளருக்குத் திருச்சபை பரிந்துரைக்கின்றது

திருமணம் என்னும் திருவருட்சாதனம் திருப்பலிக்குப் புறம்பே நிறைவேற்றப் படுமாயின் சடங்கின் தொடக்கத்தில் திருமணத் திருப்பலியின் திருமுகமும், நற்செய்தியும் வாசிக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகின்றது (ச. ஏ. இறைபணி எண்: 78).

வயது வந்தவர்களுக்கான திருமுழுக்கு சடங்கில் ஆயத்தநிலை வழிபாடுகள் பல்வேறு படிகளைக் கொண்டதாக உள்ளன. திருமுழுக்குப் பெறுபவர் படிப்படியாக ஆயத்தப் படுத்தப்படுகிறார். திருத்தியமைக்கப்பட்ட திருமுழுக்கு வழிபாட்டுச் சடங்கு நூலில் ஆயத்தநிலை பயிற்சியும் அர்ச்சிப்பும் இறைவாக்கு வழிபாட்டை ஒத்ததாக அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான திருமுழுக்கு வழிபாட்டில் நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் இறைவார்த்தை வழிபாட்டில் பெற்றோர், ஞானப்பெற்றோர் மற்றும் விசுவாசிகளின் விசுவாசத்தைத் தூண்டி எழுப்புவதாக அமைந்துள்ளது.

உறுதிப்படுத்தும் அருட்சாதன சடங்கில் நற்செய்தி வாசகம் முடிந்தபின் ஆயரின் மறைஉரையும் நடைபெறும். அதில் உறுதிப்படுத்தப்படுவோரின் விசுவாச வாழ்வுபற்றியும் அவ்வருட்சாதனத்தின் அவசியம் பற்றியும் விளக்கம் கொடுக்கப்படும், அதைத் தொடர்ந்துதான் உறுதிப்படுத்தும் சடங்கு நடைபெறுகின்றது.

அன்று கிறிஸ்துவின் பணிவாழ்வின்போது அவரிடமிருந்து அருங்குறிகள்மூலம் அருளையும் குணத்தையும் பெற்றவர்களிடமிருந்து விசுவாசமும் பணிந்த மனமும் எதிர்பார்க்கப்பட்டது. இன்று அருட்சாதனத்தின்மூலம் அருளைப் பெறுவோரிடம் இறைவார்த்தை விசுவாசத்தைத் தூண்டி எழுப்புகிறது. திருவருட் சாதனங்களைப் பெற விசுவாசம் தேவை.

## பக்திமுயற்சிகளில் இறைவார்த்தை

அருட்சாதனங்கள் இல்லாத வழிபாடுகள், தனிப்பட்ட ஆசீர்கள், மக்களின் அன்றாட வாழ்வில் அவர்களை இறைவனோடு உறவு கொள்ளச் செய்கின்றன. குறிப்பாக நற்கருணை ஆராதனை மக்களின் சிறப்பான பக்தி முயற்சியாகும். ஆகவே நற்கருணை ஆராதனை சிறப்பாக அமைக்கப்படவேண்டும். எனவே திருமறை நூல் வாசகங்கள், சங்கீதங்கள், பாடல்கள், வேண்டுதல்கள் இடம்பெற வேண்டுமென்று திருச்சபை பரிந்துரைக்கின்றது.

தனிப்பட்ட ஆசீர் வழங்கப்படும் போதும் (சிறுவர்கள், நோயாளர்கள், பொருட்கள், இடங்கள்) அங்கு இறைவார்த்தை இடம்பெற வேண்டும் என்று திருத்திய தனிப்பட்ட ஆசீர்க்கான புத்தகத்தில் அதற்குரிய வாசகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தி இவ் வாசிரைப் பெறுவோரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி இறை உறவில் வளர்க்க வேண்டும். ஏனோ இதனைப் பயன்படுத்துவது குறைவு. கடமைக்காக இத்தனி ஆசீர்கள் வழங்கப்படுகின்றன.

சாதாரண மக்களின் விசுவாச வாழ்வு வியத்தகு முறையில் வெளிப்படுவது பக்தி முயற்சிகளினால்தான். இவை அவர்களுடைய ஞான வாழ்வாக அமைந்துள்ளன. இதனால் சில பக்தி முயற்சிகளை திருச்சபை ஏற்படுத்தி ஆதரித்து வளர்த்து காத்து வருகின்றது. அவற்றில் சில நற்கருணை ஆசீர், நற்கருணை திருமணி ஆராதனை, நற்கருணைப் பவனி, யேசுவின் திருஇருதய ஆராதனை, புனிதர்களின் நவநாட்கள் போன்றவை. இவற்றை மக்கள் கூட்டமாக, சமூகமாக, குடும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகச் சேர்ந்து கொண்டாடுகிறார்கள், இத்தகைய வழிபாடுகளில் திரு மறை நூல் பயன்படுத்தப்படுகிறது. இப்பக்தி முயற்சிகள் கிறிஸ்துவை யும் கிறிஸ்தவ மறைவாழ்வையும் பிறருக்குப் போதிக்க உதவும் சிறந்த வழிமுறையாக இருக்கின்றது. எனவே இதனைப் பயன்படுத்தி இறை வார்த்தை போதிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் பாஸ்கா செயல்பாடுகள் கூறப்படுகின்றன. எனவே இங்கும் இறைவார்த்தை பயன்படுத்தப் படு கிறது, பயன்படுத்தப் படவேண்டும்.

## திருப்பாடலில் இறை வார்த்தை

திருமறை நூலை நாம் வாசிக்கும்போது, அங்கு இறைவனின் அன் பைக்கண்டு அவரது ஆற்றலை, இரக்கத்தை உணர்ந்து அனுபவித்தவர் கள் அவரைப் புகழ்ந்து பாடியதைக் காண்கிறோம். இஸ்ராயேல் மக் கள் செங்கடலைக் கடந்தபோது மக்களும் மோயீசனும் இறைவனின் இரக்கத்தைக் கண்டு திருப்பா இசைத்துப் பாடினார்கள் (யாத். 15 : 1—18). அன்னாள் என்ற மலடி இறை இரக்கத்தால் சாமுவேலைப் பெற்ற பின் இறைவன் தனக்குக் காட்டிய பரிவைக்கண்டு புகழ்பாடினாள் (1 சாமு. 2 : 1—11). புதிய ஏற்பாட்டில் கன்னிமரியாள் (லூக். 1 : 46—55) சக்கரியாஸ் (லூக். 1 : 68—79) சிமியோன் (லூக். 2 : 29—32) இறைபுகழ் பாடுவதைக் காண்கிறோம்.

அதேபோன்று கிறிஸ்தவர்களும் திருவழிபாட்டில் வாசிக்கப்படு கின்ற இறைவார்த்தைக்கு பாடல்கள் மூலம் பதில் கூறுகிறார்கள். பாடப்படும் பாடல்கள் கிறிஸ்துவின் செயலையும் அவரது விருப்பத்தை யும் விளக்குகின்றனவாக உள்ளன. பாடல்கள் இறை வார்த்தையைக் கொண்டதாகவே உள்ளன. நாமும் யேசுவழியாக இறைவனுக்குப் பதில் கூறுகிறோம்.

புதிய ஏற்பாட்டு வழிபாட்டிலே இன்று கையாளப்படும் சடங்கு களும் பொருட்களும் திருமறை நூலிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். திருமறை நூலும் திருவழிபாடும் ஒன்றை ஒன்று பிரிக்கமுடியாத அள வுக்கு இணைந்துள்ளன. வார்த்தையின்றி செயல் இல்லை. செயலுக் குப் பொருள் கொடுப்பதே இறைவார்த்தைதான். எனவேதான் திரு வழிபாட்டின் திருப்பலி, திருவருட்சாதனங்கள், திருப்புகழ்மாலை, திருப்பாக்கள் முதலியவற்றில் இறைவார்த்தை முக்கிய இடம் பெறு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டில் பாடகர் குழாம்களின் பங்களிப்பு

(அருட்சகோதரன் C. J. அன்ரனி பாலா)

## முன்னுரை

எனது குருமட வாழ்வின் விடுமுறைக் காலங்களில் பல்வேறு பணித்தளங்களுக்குப் பாடல்களைப் பழக்குவதற்காகச் சென்றதன் பயனாகக் கிடைத்த பல்வேறு அனுபவங்களினூடாகவும், வேறு பலரின் அனுபவங்களை இணைத்தும் இந்த ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்க முன் வந்துள்ளேன். இன்றைய எமது நாட்டுக் கத்தோலிக்க தமிழ் மண்ணில் இடம்பெறும் திருவழிபாடுகளில் பாடல்கள், சங்கீதங்கள், பஜனைகள் முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வேளையிலே திரு இசையின் முன்னேற்றத்தினையும், பாடகர் குழாம்களின் பங்களிப்பினையும் அதிகமாகப் பலரும் ஆய்வுசெய்யப் பின் நின்றமையினாலும், இசைத் துறையில் எனக்குள்ள ஆர்வத்தினாலும், வருங்காலத்தில் எமது வழிபாடுகளில் மக்களின் மனமொன்றித்த பங்குபற்றுதலைக் கவனத்திற்கொண்டும் இந்த ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

இறைமக்கள் யாவரும் ஒரே குடும்பமாகச் சேர்ந்து பலவித வெளி அடையாளங்களின் மூலம் இறைவனுக்கு நன்றியையும், புகழ்ச்சியையும் செலுத்தி, கிறிஸ்துவிலே தம்மைப் புனிதமாக்கி, தமது நாளாந்த வாழ்வைப் பலிப் பீடத்திலே கொண்டுவந்து சிறந்த பலிப் பொருளாகிய இறைமகனுடன் சேர்த்துத் தந்தைக்கு அளித்து, எதிர்கால வாழ்வை வாழவேண்டிய சக்தியைப் பெற்றுச் செல்லும் செயலே திரு வழிபாடாகும். தமக்கு இறைவன் கடந்தகாலத்தில் செய்த உதவிகளை நினைத்த இஸ்ராயேல் மக்களைப்போல நாமும் நன்றி கூறுகின்றோம். பாஸ்கா மறைபொருளாகிய கிறிஸ்துவுடன் எமது ஏக்க கலக்கங்களை ஏற்கும் இறைவன், தமது மகனையே எமக்கு ஆன்ம உணவாகத் தருகின்றார்.

மீட்பின் மறை பொருளாகிய வழிபாட்டில் மக்களின் கவனமான பங்குபற்றுதலுக்கு திரு இசை மிகவும் இன்றியமையாதது. இதற்குப் பாடகர் குழாம்கள் உதவி செய்யவேண்டும். ஆனால், குறிப்பாக நமது தமிழ் திரு இசைப் பாடகர் குழாம்களை எடுத்து நோக்கும்போது ஒரு சில இடங்களில் அவை மிகவும் முன்னேற்றமடைந்து மக்களை வழிபாட்டுடன் ஒன்றிக்க வைத்தாலும், பெரும்பாலான இடங்களில் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது குறிக்கோளில் பின்நிற்பதாகவே தோன்றுகிறது. இதற்குரிய பிரச்சனைகள் எவை? அவற்றிற்குரிய காரணங்கள் யாவை? தீர்வாக முன்வைக்கப்படக்கூடிய அம்சங்கள் எவை? என்பதுபற்றி நான் இங்கு ஆராய விரும்புகின்றேன். இன்றைய இருள் சூழ்ந்த காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு, வழிபாட்டில் ஓரளவாவது கருத்துள்ள முறையில் பற்குபற்ற, உதவிசெய்ய இது பயன்படுமென நம்புகின்றேன்.

## அ) எமது பங்குகளிலே பாடகர் குழாம்கள் எதிர்நோக்கியுள்ள பொதுவான பிரச்சனைகள்

1. எமது திறமைமிக்க பாடகர்களும், இசைக்கருவி மீட்டுபவர்களும் இசையமைப்பாளர்களும் மக்களுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும், கலை கலாச்சாரப் பின்னணிக்கும், அவர்களின் பொதுவான தேவைகளுக்கு ஏற்ப தமது படைப்புகளை உருவாக்கி வெளிக் கொணர முடியாமல் இருக்கின்றனர்.

2. ஒருசில பாடகர் குழாம்களின் முன்னேற்றமின்மையும், மற்றும் அடுத்த பங்குக்குழுவை வென்று புகழ் ஏணியிலே ஏறிவிட வேண்டு மென்ற போட்டி மனப்பான்மையும் முக்கிய பிரச்சனையாக உள்ளது.

3. சில பங்குகளுக்கு இசை மீட்பாளர்களை வேறு இடங்களில் இருந்து அழைக்கவேண்டி இருப்பதனால், இச்செயல் பங்கு மக்களிடையே தேவையற்ற மனவெறுப்பை உண்டாக்க வழிவகுக்கிறது.

4. எமது யாழ்ப்பாண மறைவட்டத்தின் திரு இசைக்குப் பொறுப் பான "வழிபாட்டு ஆணைக்குழுவின்" திரு இசை தொடர்பான பல செயற்பாடுகள் பல பாடகர் குழாம்களினால் அறியப்படா மல் இருக்கின்ற அதேவேளையில், சில பாடகர் குழாம்கள் மட் டும் தமது முயற்சியினாலோ, அல்லது பங்குக் குருக்களின் ஆர்வத் தினாலோ அதன் குறிப்பிட்ட சில சேவைகளை மட்டும் பெற முடிகின்றது.

## ஆ) இப்பிரச்சனைக்கான காரணங்கள்

1. வழிபாட்டின் மையக் கருத்தைக் கவனத்தில் கொள்ளாது பாடல் களைத் தாம் விரும்பியபடி தேர்ந்தெடுத்துப் போதிய பயிற்சியின் றிப் பாட முயற்சிப்பது. பழையவை என்ற ஒரே காரணத்தினால் கருத்துள்ள பொருத்தமான இசையிலமைந்த பழைய பாடல்களைத் தள்ளிவிட்டு, புதிய புதிய பாடல்களைப் பாடிச் சேர்த்துக்கொண்டு செல்வது, வழிபாடுகளில் பங்கெடுப்பதற்கும், பயிற்சிக்கு வருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கும் பின்னிற்பது, வழிபாட்டிற்குப் பிந்தி வருவது போன்ற பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

2. தமது சிறிய வயதில் பெற்ற மறைக்கல்வியைத் தவிர பாடகர்குழு அங்கத்தவர்கள், திருச்சபையின் படிப்பினைகளிலும் இறை வார்த்தையின் செய்தியிலும் போதிய பயிற்சிபெறாமல் இருக்கின்றனர்.

3. பாடும்போது கலை நயமும் தாளமும் இசையும் அப்பாடல்களின் கருத்துக்களோடு பெரும்பாலான இடங்களில் இசைந்திருப்பதில்லை. அதேவேளை இசை மீட்பாளர்கள் தமது திறமையை வெளிப்படுத்துவதற்காகவோ, பாடகர்களின் பிழையான சுரங்களை வெளிக்காட்டக் கூடாது என்ற எண்ணத்துடனோ, பாடகர்களின் குரல்களுக்கு மேலாகத் தமது இசைக் கருவிகளின் சத்தத்தை அதிகரித்து வாசிப்பதனைப் பலஇடங்களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. குரல்களுக்கு இசைக் கருவிகள் துணையாகவே இருக்கவேண்டுமென்ற உண்மை அசட்டை செய்யப்பட்டு இசையாட்சி முதலிடம் பெறுவதைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

4. பாடல்களும் பாடல் புத்தகங்களும் இந்தியாவிலிருந்தே பெரும்பாலும் பெறப்படுவதனால் எமது இசையமைப்பாளர்களும் பாடகர்களும் ஊக்குவிப்பற்ற நிலையில், தமது படைப்புக்களை வெளிக்கொணர்வதற்கு இந்தியப் பதிப்பகங்களையும், இந்திய ஆசிரியர்களையுமே நம்பியிருக்க வேண்டிய நிலைக்குக் கடந்த காலங்களில் தள்ளப்பட்டிருந்தனர்.

5. சில பங்குத் தந்தையர்கள் திரு இசையின் முக்கியத்துவத்தைப் பெரும்பாலும் அறிந்தும் ஊக்குவிக்க முடியாத நிலை காணக்கிடக்கிறது. ஒரு சிலரது ஆர்வமற்ற தன்மையும், வேறு சிலரது விருப்பற்ற தன்மையும், வேறு சிலரது இசைத்திறமையற்ற தன்மையும் காரணமாக அமையலாம். இதன் காரணமாகத் தமக்குப் பொறுப்பல்ல என்றவகையில் பெரும்பாலான குருக்கள் இப் பொறுப்பை அதே பாடகர் குழாமிடமே விட்டுவிடுகின்றனர். ஆயினும் ஒரு சில குருக்களின் முயற்சியின் காரணமாகச் சில பங்குகளின் பாடகர் குழாம்கள் அடைந்துள்ள பொறுப்புணர்ச்சியோடு கூடிய முன்னேற்றத்தையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

6. இந்தியாவில் இருந்து புதிய பாடல் புத்தகங்களையும், இசை நாடாக்களையும் பெற்றுக்கொள்வோர், அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் இருக்கின்றனர். தாங்கள் மட்டும்தான் அவற்றைப் பழக்கிப் பாடவேண்டும் என்ற ஒரு சுயநலத்துடன்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் செயற்படுவதால் பொது நன்மைக்குக் குந்தகம் விளைகிறது.

7. எமது மறைவட்டத்தின் இசைக்குப் பொறுப்பான குழு இந்தியாவில் இருந்து வரும் பாடல்களை ஏற்றுக்கொண்டு அங்கீகாரம் வழங்குவதோடு, எமது பங்குகளின் திருவழிபாட்டின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு பாடல்களைத் தொகுத்துப் புத்தகங்களாகவும், ஒலிப்பதிவு நாடாக்களாகவும் வெளியிடுவது போற்றுதற்குரிய விடயமாகும். ஆயினும் பங்குக் குருக்களின் இசைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் போதிய இசையாளர்களையும், இசை அமைப்பவர்களையும் பயிற்றுவித்து பங்குகளுக்கு வழங்குவதில் நெடுங்காலமாக ஆர்வம் குறைந்துதான் காணப்படுகிறது.

8. எமது தற்போதைய கலாச்சாரத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ப மக்களின் உணர்வுகளையும் ஏக்க தாக்கங்களையும் வெளிப்படுத்தக் கூடிய வகையில் இசைக் கருவியாளர்களையும், பாடகர்களையும், இசையமைப்பாளர்களையும் பயிற்றுவிப்பதற்கு எமது பங்குகளிலும் போதிய வசதிகள் இல்லாதிருக்கின்றன.

## இ) இப்பிரச்சனைக்கான தீர்வுகள் ...... ?

### (i) மறைவட்ட மட்டத்தில்

1. எமது தமிழ் மண்ணின் இசை அமைப்பாளர்களுக்கும், இசை மீட்டுபவர்களுக்கும் உற்சாகமும் வரவேற்பும் அளிக்கப்பட்டு அவர்கள் ஊக்குவிக்கப்படுதல் அவசியம். கருத்தரங்குகளும், வகுப்புக்களும் ஒழுங்கு செய்யப்பட்டு அவர்கள் கத்தோலிக்க மறையறியறிவின் ஒளியிலே தமது படைப்புக்களையும் ஆக்கங்களையும் வெளிக்கொணர உதவவேண்டும். ஒருசில நேரத்தில் மட்டும் அவர்கள் பயன் படுத்தப்பட்டு பின்னர் தள்ளி வைக்கப்படுதல் கூடாது. அவர்களைப் பயிற்றுவிக்கவும் அவர்களைப் பயன்படுத்த ஒருசில குருக்கள் எடுக்கின்ற சிறந்த முயற்சிகளை மட்டும் பாராட்டிவிட்டு மறைவட்ட திரு இசைக்குப் பொறுப்பானவர்கள் இருந்துவிடாமல் தமது பங்களிப்பையும் பங்குத் தளங்களுக்குக் கூடுதலாக வழங்க முன்வரவேண்டும்.

2. மறைவட்ட திரு இசைக்குப் பொறுப்பான வழிபாட்டு ஆணைக் குழு, பங்குப் பாடகர் குழாம்களின் பிரச்சனைகள் பற்றி விழிப்புணர்வுடனிருந்து, ஆசிரியர்களையும் இசையாளர்களையும் தேவைக்கேற்ப பங்குக் குருவின் ஒத்துழைப்போடு பயிற்றுவித்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மறைவட்ட வழிபாட்டு ஆணைக்குழுவிலே இசைக்குப் பொறுப்பானவர்கள் பின்வருவன போன்ற சில செயற்பாடுகளை சட்டரீதியாக நடைமுறைப் படுத்துவது பற்றி கவனத்திற்கெடுப்பது நன்மை விளைவிக்கும். உதாரணமாக, வழிபாட்டிற்குப் பொருத்தமான பாடல்கள் பஜனைகளைத் தேர்ந்தெடுத்துப் பாடுவது, எமது தற்போதைய கலாச்சாரப் பின்னணிக்கும் இறைமக்களின் பக்தி உணர்வுக்கும் ஏற்ப பாடல்களை இசையமைப்பது, அவற்றுக்கேற்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது, திருவழிபாட்டு ஆண்டின் சிறப்பான காலங்களில் பொருத்தமான பாடல்களை மட்டும் பழகிப் பாடுவது ஆகியன.

4. ''இறைபுகழ் பாடுவோம்'' (1980), ''இறைமக்கள் இசையமுதம்'' (1983), ''இறைவனைப் புகழ்வோம்'' (1984), ''இறைபண் பாடுவோம்'' (1986) போன்ற பாடல் தொகுப்புப் புத்தகங்களும் ஒலிப்பதிவு நாடாக்களும் யாழ். மறைப்பணிக் குழுவினரால் வெளியிடப்பட்டது பாராட்டப்பட வேண்டிய விடயம். ஆயினும் பக்தியான இசையிலமைந்த பாடல்களைக் கொண்ட புத்தகங்கள் காலப்போக்கில் பல பங்குகளில் அருகிவிட்டன; பழைய பாடல்களை விரும்புகின்ற பலரும் வழிபாட்டில் பங்கெடுக்கின்றனர்; பாடகர் குழாமுடன் சேர்ந்து எல்லோரும் புத்தகங்களைப் பாவித்து பாடிப் பயன் பெறவேண்டிய தேவையிருக்கின்றது. எனவே ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு ஒருமுறையாவது பழையனவும் புதியனவும் கலந்த பொதுப் பாடல் புத் புத்தகமொன்று வெளிவந்தால் நன்ருக இருக்கும். இதற்கு உதாரணமாக இந்தியத் தமிழக ஆயர்கள் எல்லோரும் சேர்ந்து வெளியிட்ட ''இறைபணிப் பாடல்கள்'' (1981, கண்டி மறைக்கல்விநிலையம் அண்மையில் வெளியிட்ட ''பரமனுக்குப் பண்ணிசை'' (1986) போன்ற போன்ற புத்தகங்களைக் குறிப்பிடலாம். திருவழிபாட்டு ஆண்டின் காலங்களுக்கேற்ற பாடல் புத்தகங்களையும் வெளியிடலாம். அல்லது அவற்றை வெளியிட முயற்சி எடுக்கின்ற பங்குத் தந்தையர்களுக்கு உத்தரவு கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், அவற்றை வெளியிட்டுப் பங்குகளில் பயன்படுத்தப்படவும் திரு இசைக்கும் பொறுப்பானவர்கள் முயற்சி எடுக்கவேண்டும்

5. பாடல் புத்தகங்களில் அச்சுப் பிழைகளைத் தவிர்க்க இன்னும் கூடுதல் முயற்சி எடுத்தல் நன்று. உதாரணமாக, 'இறைபுகழ் பாடுவோம்' பாடல் தொகுப்பில் 'வரங்கேட்டு வருகின்றேன் இறைவா' என்ற பாடலிலே

நலமெல்லாம் எனக்கென்று தேடும் குணம் — இனி
நாள்தோறும் இறக்கின்ற வரம் கேட்கின்றேன்

என்று இருக்கின்ற வரிகளிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நலமெல்லாம் உனக்கென்று தேடும் குணம்"
என்று அச்சடிக்கப் பட்டிருப்பது எதிர்மாறுன பொருளைத் தரு கின்றது. அடுத்து வெளிவந்த 'இறைமக்கள் இசையமுதம்' தொகுப்பிலும் இதே தவறு மீண்டும் அச்சேறியது. இவற்றைத் தவிர்த்தல் நன்று.

6. வெவ்வேறு பங்குகளில் பாடகர் குழாம்களிடையே புரிந்துணர்வை யும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையையும் வளர்க்கும் விதத் தில் மறைவட்ட ரீதியில் அல்லது மறைவட்டார ரீதியில் முயற்சி எடுக்கப்படுதல் நன்று.

### (ii) பங்கு மட்டத்தில்

1. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைக்குப் பொறுப்பாக உள்ள அருள்தந்தையர்கள் பாடகர் குழுமட்டிலும் தமக்குள்ள பொறுப் பை உணர்ந்து, இசை மீட்டுபவர்களையும், பாடுபவர்களையும், இசையமைப்பாளர்களையும் தேவையான வசதிகளை வழங்கிப் பயிற்றுவித்தல் அவசியம்.

2. அவர்கள் வழிபாட்டில் தமது பங்கினை உணர்ந்துகொள்ளும் வகை யில் அவர்களைத் திருச்சபையின் படிப்பினைகளிலும், இறை வார்த் தையின் அறிவிலும் வளர்ப்பது அவரது முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

3. இசை பயிற்றுவிக்கும் நோக்கத்திற்காக, தத்தமது பங்குகளிலோ வேறு இடங்களிலோ அறியப்படாமல் இலைமறை காய்களாக இருக்கும் இசைக் கலைஞர்களின் உதவிகளையும் நாடலாம்.

4. வழிபாட்டினைச் சிறப்பாக்கும் வகையில் பாடகர் குழுவின் அங் கத்தவர்கள் தமது முக்கியத்துவத்தை உணர்ந்து பங்கின் வழி பாட்டுக் குழுவில் பங்கெடுப்பது அவசியம்.

5. அதேவேளையில் பங்கின் ஒவ்வொரு அங்கத்தவரும், தாம் வழிபாட் டில் முழுமையாகப் பங்குபற்ற வேண்டும் என்ற நோக்கத்தை மனதில்கொண்டு பாடகர் குழாம் மட்டில் பராமுகமாக இருக்கா மல், பொறுப்புள்ள செயற்பாடுகளை வழங்கி அதனை முன்னேற்ற வேண்டும்.

6. திருவழிபாட்டு ஆணைக்குழுவில் திருச்சபைக்குப் பொறுப்பானவர் வர்கள் தம்மால் வழங்கப்படுகின்ற வசதிகள் போதியளவு பாவிக் கப்படவில்லையென்றும், அதேவேளையில் வேறு பலரின் உதவியுடன் புதிய புதிய பாடல்கள் பழகிப் பாடப்படுவதனுல் மக்களின் பங்கு பற்றுதல் குறைவு என்றும் அதிருப்தி தெரிவிக்கின்றனர், இத னைப் பங்குக் குருக்கள் கருத்திற் கொள்வது நலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (iii) குருத்துவக் கல்லூரிகள், துறவற சபைகள் மட்டத்தில்

1. வருங்காலக் குருக்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் குருத்துவக் கல்லூரிகளும், சிறிய குருமடங்களும், உரோமைத் திருச்சபையின் மேற்கத்தைய போர்வையின் கீழே இனியும் தங்கி இருக்காமல், எமது தமிழ் மண்ணின் தற்போதைய கலாச்சாரப் பின்னணியில் எம் மக்களின் காலத்தின் தேவைக்கு ஏற்ப கத்தோலிக்க விசுவாச உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய முறையில் தமது ஆக்கங்களைப் படைக்கும் விதத்தில் தமது மாணவர்களைப் பயிற்றுவிக்க முனைவது அவசியம். தமிழ் இசையினைப் பாடத் திட்டத்தில் சேர்ப்பதும் கருத்தரங்குகள் உரையாடல்கள் நிகழ்த்துவதும் சாலச் சிறந்ததாகும். கண்டி தேசிய குருத்துவக் கல்லூரி இதற்கு வெகுகாலமாக முக்கியத்துவம் கொடுத்து வருவது பாராட்டக் கூடிய விடயமாகும்.

2. அருள் வாழ்வினை ஆழமாக்கும் துறவற சபைகள் தமது அதிகாரங்களுக்கு அமைந்த விதத்தில் திருச்சபையின் தேவைகளுக்கேற்ப பங்குத் தளங்களில் உதவக்கூடிய வகையில் சிறந்த இசையமைப்பாளர்களையும் இசை மீட்பாளர்களையும் பாடகர்களையும் கத்தோலிக்க மறையறிவிற்கும், தமிழ் பண்டாட்டிற்கும் தகுந்த விதத்தில் உருவாக்குவது அவசியம். இசைக்கென்றே பயிற்றப் பட்டவர்கள் பலர் தற்போது வேறு துறைகளில் பணியாற்றுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இது தவிர்க்கப்பட வேண்டும்.

## முடிவுரை

வழிபாட்டிற்குத் திருஇசை மிகவும் முக்கியமானது. மக்கள் தமது வாழ்வின் பனியை வாழ்வதற்கு வழிபாட்டிலே அவர்களது மனமொன்றித்த பங்குபற்றுதல் அவசியம். இதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கிவருகின்ற தமிழ் திருஇசைப் பாடகர் குழாம்கள் சில இடங்களில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், அவை பல்வேறு இடங்களில் போதிய முன்னேற்றமின்றிக் காணப்படுகின்றன. மறைவட்ட மட்டத்திலும், மறைவட்டார ரீதியிலும், பங்கு மட்டத்திலும் போதிய வசதிகள் வழங்கப்படாமலும், வழங்கப்பட்ட வசதிகள் பாவிக்கப்படாமலும் இருப்பதனைக் காணமுடிகிறது. இந்நிலை மாறவேண்டும். பாடகர் குழாம்களின் முன்னேற்றத்திற்கு திரு இசைக்குப் பொறுப்பானவர்களும் பங்குக் குருக்களும் மட்டுமல்ல, மாறாக பங்கிலுள்ள ஒவ்வொரு அங்கத்தவரும் தமது பங்களிப்பினை வழங்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் வத்திக்கான் சங்கமும் திருவழிபாட்டைப் புதுப்பித்தலும்

அருட்சகோ. அ. விக்ரர் சோசை
(2ஆம் வருட இறையியல்)

## முன்னுரை

திருச்சபைச் சரித்திரத்தில் 21 ஆவது சங்கமாக மிளிர்வது 2ஆம் வத்திக்கான் சங்கம். இதற்கு முன் கூட்டப்பட்ட 20 சங்கங்களும் திருச்சபையின் கொள்கைக்கு எதிராக எழுந்த பேதகங்களைக் கண்டிக்கவோ அன்றேல் தனது விசுவாசக் கொள்கைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறவோ கூட்டப்பட்டன. ஆனால் இச் சங்கம் அவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்தி திருச்சபைக்குப் புத்துயிர் ஊட்ட முன் வந்தது.

இதன் பின்னணியில் 1962ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி திருச்சங்கம் கூட்டப்பட்டது. இச்சங்கத்தைக் கொள்கைகளில் உள்ள பிழைகளைத் திருத்த தான் கூட்டவில்லையென கூறிய திருத் தந்தை 23ஆம் அருளப்பர், திருச்சபையை இன்றைய காலகட்டத்திற்கேற்ப மாற்றி கிறிஸ்தவ செய்தியை எக்காலத்துக்கும் எந்த நிலைக்கும் ஏற்ற விதத்தில் மாற்றியமைக்கவே தான் கூட்டியதாக எடுத்தியம்பினார். எனவே திருச்சபை இன்றைய காலத்தின் அறிகுறிகளைக் அறிந்து அதற்கேற்ப தன்னை, தனது அமைப்புகளை, உறவுகளை மாற்றியமைக்க உறுதிபூண்டது. இத்தகைய மேலான இலட்சியங்களை அடைய முதலில் திருச்சங்கமானது வழிபாட்டை புதுப்பித்து, வழிபாட்டை மக்களுக்குரிய விதத்தில் கொடுப்பதைத் தனது தலையாகிய கடமையாகக் கொண்டது.

## புதுப்பித்தலின் நோக்கம்

திருச் சங்கமானது வழிபாட்டை திருச்சபை வாழ்வின் மையமாக நோக்குகின்றது. ''திருவழிபாடு திருச்சபையின் செயல் முழுவதுமே நாடிநிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அஃது ஓர் ஊற்றாகவும் உள்ளது'' (திருவழிபாடு 10). இவ்வாறு வழிபாட்டின் மேன்மை அமையும்போது வழிபாட்டை புதுப்பித்தலின் பிரதான நோக்கம் என்ன என்பது நமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டப்படுகின்றது. அதாவது ''வழிபாட்டில் மக்கள் அனைவரும் முழுமையான, கருத்தான, நேரடியான விதத்தில் பங்குபெற'' (திவ 14) வழிபாட்டை சீரமைக்க வேண்டுமென திருச்சங்கம் வலியுறுத்துகின்றது.

எனவே மேற்கூறிய இலக்கை அடைவதற்கு வழிபாட்டுச் சடங்குகளில் இறைமக்கள் அனைவரும் சுறுசுறுப்பாயும் அறிந்துணர்ந்து சுலபமாய் பங்குபெறக்கூடிய விதத்திலும், மாற்றக்கூடியதும் மாற்றவேண்டியதுமான அம்சங்களில் உடனடி நடவடிக்கைகள் தேவையென சங்கம் வலியுறுத்தியது. இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும்போது திருச்சபை கண்மூடித்தனமாக செயலாற்ற முடியாது. தான் நினைத்ததை வழிபாட்டில் திணிக்கமுடியாது. ''விசுவாசத்தையும் சமூகம் முழுவதன் நலனையும் சாராதவற்றில் வளைந்துகொடாத ஒரு நிலையான அமைப்பை வழிபாட்டிலும்கூட திருச்சபை திணிக்க விரும்பவில்லை'' (திவ 37). ஆனால் ''உரோமை வழிபாட்டு முறையின் அடிப்படையான ஒருமைப்பாட்டை பாதிக்காத முறையில் பல்வேறு குழுவினருக்கும், மண்டலங்களுக்கும், மக்களுக்கும் சிறப்பாக நற்செய்தி அறிவிப்பு நாடுகளில் வாழ்வோருக்கும் ஏற்றுற்போல் முறையான வேறுபாடுகளைப் புகுத்த'' (திவ 38) திருச்சங்கம் கவனம் செலுத்தும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளது.

## வழிபாட்டில் ஆர்வமுடன் பங்கேற்றல்

வழிபாடானது தனியே குருவானவர் செலுத்தும் சடங்கோ அன்றேல் மக்கள் மௌனம் அனுசரித்து ஏதோ மந்திர வித்தைகளைப் பார்த்துவிட்டுச் செல்லும் ஓர் நிகழ்ச்சியுமல்ல. மாறுக அவர்கள் குருவுடன் சேர்ந்து தங்கள் ஆன்மா, உடல், செயல்கள் மூலம் ஆர்வமுடன் பங்குபற்றுகின்ற ஓர் கொண்டாட்டமாகும். திருவழிபாட்டின் இயல்புக்கு ஏற்ப விசுவாசிகள் அனைவரும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் முழுமையாகவும் உணர்ந்தும் செயல்முறையிலும் பங்குகொள்ள வேண்டுமென்பது திருச்சங்கத்தின் படிப்பினையாகும்.

எமது வழிபாடுகளில் பல செயல்பாடுகள் உள்ளன. அவை உட்காருதல், நிற்றல், தலை குனிதல், முழந்தாள் படிதல், கை விரித்தல், கை கூப்புதல், நெஞ்சில் பிழை தட்டுதல் போன்றவையாகும். இவை ஒவ்வொன்றும் பொருள் பொதிந்தவை. ஒவ்வொரு நிகழ்வுகளும் நம்மை வழிபாட்டில் ஆர்வமுடனும் சுறுசுறுப்புடனும் பங்குபெற்ற தூண்டுகின்றன. ஆனல் இன்று பலர் வழிபாட்டில் ஆர்வமிழந்து செயலிழந்து நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றை செய்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலருக்கு அருவருப்பையும் இன்னும் சிலர் இவற்றை அநாகரிகமான செயல் எனக்கூறி ஒதுக்கி மௌனம் சாதிப்பவர்களாக அல்லது ஆலயத்துக்கு வெளியே நின்று வேடிக்கை பார்ப்பவர்களாக இருப்பதை காணும்போது இவர்கள் வழிபாட்டின் மகத்துவத்தை உணராதவர்கள் எனக் கூறத் தோன்றுகின்றது.

வழிபாட்டில் உள்ளமும் உடலும் சேர்ந்து பங்குகொள்ள வேண்டும். இதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் முழுமையான வழிபாட்டில் பங்குபற்றி பயனடைந்தவர்களாவோம். எமது மனதை பல வழிகளில் விட்டுவிடாதிருக்க வழிபாட்டில் உள்ள செயல் முறைகள், பாடல்கள், பதில் மொழிகள், செபங்கள் என்பவற்றில் ஆர்வமுடன் பங்குகொள்ளும்போது நாம் முழுமையான வழிபாட்டில் வளர்பவர்களாவோம்,

## வழிபாடு வேறு வாழ்வு வேறு?

வழிபாடும் வாழ்வும் இரண்டு நிகழ்வுகளெனினும் கிறிஸ்தர்வகளாகிய நாம் வழிபாடு வேறு வாழ்கை வேறு எனப் பிரித்துப்பார்க்க முடியாதவர்களாகவுள்ளோம். இதைத்தான் திருச்சங்கமும் வலியுறுத்துகின்றது. ''திருவழிபாடு திருச்சபையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அஃது ஓர் ஊற்றாகவும் உள்ளது. அவர்கள் தங்கள் விசுவாசத்தால் உணர்ந்துகொண்டவைகளைத் தங்கள் வாழ்வில் பற்றி நிற்குமாறு மன்றாடுகின்றது'' (திவ 10).

அவ்வாறாயின் வழிபாட்டில் முழுமனத்துடன் பங்குபற்றி ஒருவர் தான் வாழ்க்கையில் வித்தியாசமாக வாழ முடியாது. எதை வழிபாட்டில் பெற்றுக்கொண்டாரோ அதை தன் வாழ்க்கைக்கு மாற்றக் கடமைப்பட்டுள்ளார். உதாரணமாக நற்கருணை மூலமாக எவ்வாறு கிறிஸ்து உலகை அன்பு செய்தார் என உணரும் கிறிஸ்தவன், தன் வாழ்க்கையில் அயலார்மட்டில் கண்மூடித்தனமாக நடந்துகொள்ள முடியாது. அவர்களின் தேவைகளில் உதவுபவராக, அவர்களுக்கு அன்பு செய்பவராக இன்னும் குறிப்பாக கிறிஸ்து மற்றவர்களை அன்பு செய்தது போல அக் கிறிஸ்தவனும் தன் அயலானை நேசிக்க கடமைப்பட்டுள்ளான். வழிபாட்டில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் கேட்டவை வீணே செல்லாது அவனது வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்த அவன் முனைய வேண்டும். தான் வாழும் சூழலில் கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதன் மூலம், அவரில் இருந்த மன நிலையைக்கொண்டு வாழ்வதன் மூலம் ஓர் கிறிஸ்தவன் வழிபாட்டையும் வாழ்க்கையையும் தொடர்பு படுத்திப் பார்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டின் சமூகத்தன்மை

ஆரம்ப காலத்தில் இருந்தே கிறிஸ்தவ வழிபாட்டின் சமூகத் தன்மை வலியுறுத்தப்பட்டுவருவதை நாம் காண்கின்றோம். இயேசுவைப் பின்பற்றி உயிர்ப்பின் பின் சீடர்களும், புதுக் கிறிஸ்தவர்களும் பொது ஆராதனை நேரங்களில் யூதரின் செபக்கூட்டத்திற்குச் சென்றனர் (அ. பணி 3:1). அப்பம் பிட்கும் பலியை ஒப்புக்கொடுக்க வீடுகளில் கூடினர் (அ. பணி 2:46). சிறு வீடுகளில் கூட்டப்பட்ட இச்சபை நாளடைவில் பொதுக்கோவில்களாக மாறின. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகளில் நடந்த கலாபனையின்போது மக்கள் இரகசியமாக சிறு சிறு குழுக்களாக வீடுகளில் கூடி வழிபட்டனர். கொன்ஸ்ரன்ரைன் அரசன் வழங்கிய மதச்சுதந்திரம் மக்கள் தேவாலயங்களை கட்டி எழுப்பி ஒன்றுகூடி வழிபட முழுச்சுதந்திரம் அளித்தது. இவ்வாறு ஆரம்பத்திலிருந்தே வழிபாடு பொதுத்தன்மை வாய்ந்ததாக, சமூகத்தன்மை வாய்ந்ததாக இருப்பதைக் காண்கின்றோம்.

வழிபாட்டின் சமூகத் தன்மையைப்பற்றி பலர் பலவாறு கூறியிருப்பதைக் காண்கின்றோம். அந்தியோக்கியா இஞ்ஞாசியார், டிடாக்கே ஏடுகள் வழிபாட்டின் சமூகத்தன்மைக்கு முக்கிய இடமளித்துள்ளனர். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளும் இதை எடுத்துக் கூறத் தவறவில்லை. "திருவழிபாட்டுச்செயல்கள் தனிச் செயல்களன்று... புனித மக்களின், திருச்சபையின், ஒன்றிப்பின் திரு அருட்சாதனம்... ஆகவே திருவழிபாட்டுச் செயல்கள் திருச்சபை என்னும் முழு உடலைச் சார்ந்தவை" (திவ 26).

இவ்வாறு வழிபாட்டின் சமூகத்தன்மையை நிலைநாட்டும் இடத்து, வழிபாட்டில் இறைவனுடன் தொடர்புகொள்ளும் தனிநபரின் இடமென்ன என்ற சர்ச்சை எழுந்துள்ளதை கவனத்தில் எடுக்கவேண்டும். வழிபாடு சமூகத்தன்மை வாய்ந்ததாயினும், அங்கு ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியிலே இறைவனுடன் தொடர்புகொள்கின்றனர். அவ்வாறுயின் வழிபாட்டின் தனிநபர் தன்மையும் சமூகத்தன்மையும் முரண்பாடு வாய்ந்தவையா? பேர்னாட் ஹேறிங் என்ற ஒழுக்கவியல் இறையியலாளர் 'The Sacrament in Secular Age' என்னும் நூலில் இதைப்பற்றிக் குறிப்பிடும்போது "உண்மையில் இவை இரண்டிற்குமிடையே முரண்பாடு இல்லை" (பக்கம் 120) என கூறுகின்றார். இவை இரண்டும் சேர்ந்தே ஒரு வழிபாட்டை பூரணப்படுத்துகின்றன. உண்மையில் கடவுளை வழிபடுவது என்பது ஒவ்வொருவருடைய உள்ளத்தில் இருந்து பிறக்க வேண்டிய ஒன்று. அதேபோல் கடவுளை அன்பு செய்வதும் ஒவ்வொருவனுடைய உள்ளத்தில் இருந்து பிறக்க வேண்டியது. ஆனல் அவன் பிறரை வெறுத்து கடவுளை அன்புசெய்ய முடியாதவனுக காணப்படுகின்றுன். அதேபோல் பிறரை ஒதுக்கிவிட்டு தனியே இறைவனுக்கு வழிபாடு செலுத்த முடியாதவனுக நிற்கின்றுன். எனவே வழிபாட்டின் தனித்தன்மையும், சமூகத்தன்மையும் ஒன்றுகச்சேரும் போது அங்கு உண்மையான இறைவருபாடு பிறக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டை பண்பாட்டு மயமாக்கல்

கத்தோலிக்க திருச்சபை எந்த ஒரு இனத்துக்கோ, மொழிக்கோ, கலாச்சாரத்திற்கோ சொந்தமானதல்ல. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முன்பு எல்லா இடங்களிலும் பொதுவாக ஒரே மாதிரியான வழிபாடு நடத்தப்பட்டுவந்தது. திருச்சங்கத்தின் மறுமலர்ச்சிக்குப்பின் வழிபாடு அந்தந்த கலாச்சாரங்கள், மொழிகள் இவற்றில் நடைபெற வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எமது தமிழ் வழிபாடுகளைப் பொறுத்தமட்டில் தமிழ் மொழியில் வழிபாடுகள் நடைபெறல், பாதணிகளை வெளியில் கழற்றிவிட்டு ஆலயத்திற்குள் செல்லல், பஜனைகளைப் பயன்படுத்துதல், ஆராத்தி எடுத்தல், பொட்டு வைத்தல் போன்ற சில பண்பாட்டிற்குரிய செயல்கள் நடைபெறுவதை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் இன்னும் கூடுதலாக எமது வழிபாடுகளை பண்பாட்டிற்கேற்ப ஏன் மாற்றியமைக்க முடியாது?

பண்பாட்டு மயமாக்கலை முதலில் நாம் நன்கு உணர வேண்டும். தமிழ்ப் பண்பாடென்பது சைவ முறைகளை எமது வழிபாடுகளுள் புகுத்துதல் அன்று. எமது பண்பாட்டில் எவை எவை நல்லவையோ, எவற்றைப் புகுத்த முடியுமோ, அவற்றைப் புகுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இதைத்தான் திருச்சங்கமும் வலியுறுத்துகின்றது. ''மக்களின் பழக்க வழக்கங்களிலே மூட நம்பிக்கைகளுடனும் தவறுகளுடனும் இரண்டறக் கலவாத யாவற்றையும் திருச்சபை நன்மனத்துடன் ஆராய்கின்றது. இயலுமாயின் அவற்றைப் பழுதின்றிப் பாதுகாக்கின்றது'' (திவ 37).

கிறிஸ்தவமானது ஆசியாவிலே ஒருபுறம் வெளிநாட்டு இறக்குமதிப் பொருள் என சந்தேகக்கண் கொண்டு நோக்கப்படுகின்றது. மறுபுறத்திலே இங்குள்ள பல்வேறு மத, கலாச்சாரங்கள் மத்தியிலே கிறிஸ்தவம்வாழ அழைக்கப்பட்டுள்ளது. இதன் மத்தியிலே கிறிஸ்தவம் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்த ஒரே ஒரு வழி அது ஆசிய மண்ணுக்கேற்ற கிறிஸ்தவமாக மாறுதல். அப்போதுதான் அது உயிர்த்துடிப்புடன் பல்வேறு மத, கலாச்சாரங்களுடே வளரமுடியும்.

## முடிவுரை

புதுப்பித்தல் என்பது ஒவ்வொருவருடைய உள்ளங்களிலிருந்து பிறக்க வேண்டிய ஒன்று. திருச்சங்கம் கொள்கைகளை வெளியிட்டாலும் அதை நடைமுறைப்படுத்துவது நமது கைகளிலேயே தங்கியுள்ளது. ஆவியின் வழிநடத்துதலுடன் நாம் சங்கம் எடுத்துக்காட்டிய புதுப்பித்தலை நடைமுறைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே எமது வழிபாட்டை நமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி வாழ புதுப்பித்தலை பெரும் பணியாகக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடும் அடையாளங்களும்

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

## 1. அடையாளம் என்றால் என்ன?

ஒரு உண்மையை அல்லது உட்பொருளைச் சுட்டிக்காட்டுவது அல்லது வெளிப்படுத்துவது அடையாளம். பெருந்தெருக்களில் வாகனங்களைக் கட்டுப்படுத்த சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சிவப்புக் குருசு மருத்துவமனையைச் சுட்டிக் காட்டுகின்றது. கார்முகில் மேவி வரும் பொழுது மழைபொழியும் என்பது அறிகுறியாகும். ஒரு நாட்டைக் சுட்டிக்காட்ட தேசியக் கொடி சின்னமாய் அமைகின்றது. பதவிகளைச் சுட்டிக்காட்ட உடைகள் அறிகுறியாய் விளங்குகின்றன. காவல் படையினர் தமக்கென்று குறிக்கப்பட்ட உடைகளை அணியும்பொழுது அவர்களின் பதவியும், அதிகாரமும் தெளிவாகின்றது. வெவ்வேறு துறைகளிலே பணிபுரிகின்றவர்கள் தமக்கென குறிக்கப்பட்ட உடைகளை அணியும்போது அவர்களது பதவிகளை இனங்காண முடிகிறது. இவ்வாறு ஒரு பொருள், நிகழ்ச்சி அல்லது ஆள் அடையாளங்களாக மாறக்கூடியவை.

## 2. அடையாளம் ஏன் அவசியம்?

அடையாளமின்றி மனிதனாலே வாழ முடியாது. பேசத் தெரியாத குழந்தையும் அடையாளம்மூலம் தன் தேவைகளை வெளிப்படுத்துகின்றது. மனத்திலே புதைந்திருக்கும் எண்ணங்கள் யாவும் வார்த்தை என்னும் அடையாளத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன. சாதாரண சமூகத் தொடர்புகளுக்கு அடையாளம் அத்தியாவசியமானது. மனித வாழ்வு உறவுகளில் நிறைவு பெறுகின்றது. ஒருவன் தன் நட்புறவை வெளிப்படுத்த தன் நண்பனுக்கோர் அன்பளிப்பை வழங்குகின்றான். இன்னொருவன் தன் நட்புறவை வெளிப்படுத்த அரிய விருந்தொன்றை அளிக்கின்றான். கண்காணாத் தொலைவில் இருக்கும் ஒரு நண்பன் கடித மூலம் அல்லது தொலைபேசிமூலம் தன் நட்பை வளர்க்கின்றான். மேலும் அடையாளங்கள் வழியாக ஒருவனுடைய ஆளுமை வெளிப்படுகின்றது. ஒருவனுடைய மகிழ்ச்சி சிரிப்பிலே வெளிப்படுகின்றது. இன்னொருவனுடைய கோபம் அவனுடைய தொனியிலும் பார்வையிலும் வெளிப்படுகின்றது. உள்ளத்தில் மறைந்திருக்கும் ஒருவனுடைய சோகம் அவனுடைய முகத்திலே வெளிப்படுகின்றது. இவ்வாறு தொனி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை, முகம் போன்றவை ஒருவனுடைய உள்ளரங்க வாழ்வை வெளிக்காட்டுகின்றது. எனவே மனித உறவுக்கும் உறவின் வளர்ச்சிக்கும் வளர்ச்சியின் நிறைவுக்கும் அடையாளங்கள் அடித்தளங்களாகின்றன.

## 3. விவிலிய அடிப்படையில் அடையாளம்

காலம் கடந்த கடவுள், கண்ணுக்குப் புலப்படாத கடவுள் மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்த அடையாளங்களைப் பயன்படுத்தினார். ''இருக்கிறவர் நாமே'' என்று எரியா முட்செடியில் இறைவன் தன்னை மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். நெருப்பானது இறைபிரசன்னத்தின் அடையாளமாக பழைய ஏற்பாட்டில் இருந்தது. பாலைவனத்தில் பசியால் வாடிய இஸ்ராயேல் மக்களுக்கு வானத்தில் இருந்து பொழியப்பட்ட மன்னா இறை அன்புக்கும் பராமரிப்புக்கும் அடையாளமானவை. செங்கடல் ஊடாக இஸ்ராயேல் மக்கள் சென்ற விடுதலைப் பயணம் இறை ஆற்றலுக்கும், மீட்புக்கும் அடையாளமானது. நோவா காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பாவப்பெருக்கின் தண்டனைக்கு அடையாளமாகும். இஸ்ராயேல் மக்கள் அருந்திய பாஸ்காச் செம்மறி அவர்களது விடுதலையின் நினைவுச் சின்னமாக மாறியது. பழைய ஏற்பாட்டில் இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட பிதாப்பிதாக்கள், இறைவாக்கினர்கள், அரசர்கள், நடுவர்கள் போன்றோர் இறை அழைப்பிற்கும் அவரது வழிநடத்தலுக்கும் அடையாளமாக விளங்கினர்.

## 4. புதிய ஏற்பாட்டில் அடையாளங்கள்

''வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார். அவரது மாட்சிமை நாங்கள் கண்டோம், தந்தையிடம் இருந்து அவர் பெற்ற மாட்சிமை ஒரே பேறான அவருக்கு ஏற்ற மாட்சிமையே'' (அருள 1:14). கிறிஸ்து பிதாவின் உன்னத அடையாளமாக விளங்குகின்றார். அவரே தந்தையின் அன்பின் வெளிப்பாடு. கிறிஸ்துவினுடைய போதனைகளும் புதுமைகளும் இறையரசின் அடையாளங்களாக விளங்குகின்றன. கிறிஸ்துவினுடைய உயிர்ப்பு மீட்பிலே சிறந்த அடையாளமாகத் திகழுகின்றது. கிறிஸ்து விண்ணகம் செல்லுமுன் தன் மீட்பின் பணியை இவ்வுலகில் தொடர்ந்தாற்ற திருச்சபையைப் பணித்தார். எனவே திருச்சபையானது இவ்வுலகிலே மீட்பின் அருட்சாதனமாக விளங்குகின்றது. பழைய ஏற்பாட்டில் நோவா குடும்பத்தினரை வெள்ளப்பெருக்கில் இருந்து காப்பாற்றிய பேழையைப் போன்று, புதிய ஏற்பாட்டிலே திருச்சபை அமைந்துள்ளது. இவ்வாறாக திருச்சபையானது மீட்பின் அடையாளமாக இவ்வுலகில் வழிகாட்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை மீட்பின் அடையாளம் என்று கூறும்பொழுது, அது திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொருவனையும் குறிக்கின்றது. எனவே கிறிஸ்தவனும் ஒரு அருட்சாதனமாகத் திகழ்கின்றான். அவன் இவ்வுலகிலே மீட்பை அறிவிப்பவனாக, கிறிஸ்துவின் சாட்சியாக அன்பில் நிறைந்து விளங்கி அதனைப் பிறரோடு பகிர்ந்துவாழும்பொழுது அவன் இவ்வுலகில் ஒரு அருட்சாதனமாக மாறுகின்றான்.

## 5. திருவழிபாட்டு அடையாளங்கள்

திருச்சபையின் ஏழு அருட்சாதனங்களும் பொதுவழிபாட்டுத் தன்மை உடையனவாகவும், சமூகத்தன்மை கொண்டனவாகவும் இருக்கின்றன. எனவே அருட்சாதன வழிபாடுகளை தனிப்பட்ட அல்லது பிரத்தியேக சடங்குகளாக கருதுவது தவறு. அருட்சாதனங்கள் மீட்பின் அடையாளங்கள். இந்த மீட்பைக் கிறிஸ்து திருச்சபை என்ற சமூகத்தின் வழியாகவே உலகிற்கு அறிவிக்கத் திருவுளமானார். கிறிஸ்துவின் பாடுகள் - மரணம் - உயிர்ப்பு ஆகிய மறை நிகழ்ச்சியை அருட்சாதனங்கள் மையமாகக் கொண்டுள்ளன. எனவே அருட்சாதன சடங்குகள் யாவும் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டுள்ளன. அருட்சாதனங்கள் வெறும் சடங்குகள் மட்டுமல்ல, மாறாக அவை கிறிஸ்துவின் மீட்பை அறிவிக்கின்ற, அருள் வழங்குகின்ற, ஆற்றல்மிக்க, உயிருள்ள இறைவனின் அடையாளங்களாகும். அருட்சாதனங்கள் முழுத் திருச்சபைக்கும் கிறிஸ்துவால் வழங்கப்பட்ட கொடைகளாகும். இதனால் திருவழிபாட்டு அடையாளங்கள் சமூகத்தன்மையும் பொதுத் தன்மையும் கொண்டவையாக இருக்கின்றன. மேலும் திருவழிபாட்டு அடையாளங்கள் இறைவனோடும் சமூகத்தோடும் உரையாடவும், உறவாடவும் வழிகோலுகின்றன. திருவழிபாட்டு அடையாளங்கள் விசுவாசத்தையும், அன்பையும், இறையருளையும் வெளிப்படுத்தும் அடையாளங்கள். இவை அருளைக் குறிப்பவை மட்டுமல்ல அருள் வழங்கும் கருவிகளாகவும் மாறுகின்றன.

## 6. அடையாளங்களும் பண்பாடும்

வழிபாடுகள் அர்த்தமுள்ளவையாய் இருப்பதற்கு அடையாளங்களே அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. குறிப்பாக இறக்குமதி செய்யப்பட்ட அந்நிய அடையாளங்கள், வாழ்வுக்கும் சூழலுக்கும் பொருளற்ற அடையாளங்கள், புரிந்துகொள்ள முடியாத அடையாளங்கள் ஆகியவை வழிபாட்டின் உட்பொருளை அழித்துவிடுகின்றன. எனவேதான் அடையாளங்கள் பொருள்மிக்கதாய், பொருத்தமுள்ளதாய், புரிந்துகொள்ளக்கூடியதாய், வாழ்வோடு இணைப்புள்ளதாய் இருத்தல் அவசியமானது. ஏன் செய்கின்றோம், என்ன செய்கின்றோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்குச் செய்கின்ழேம் என்ற சில அடிப்படையான வினக்களுக்கு விடைகளையும், விளக்கங்களையும் தரக்கூடிய சடங்கு அல்லது செயல் பாடு, அர்த்தமுள்ள வழிபாட்டுக்கு அடிப்படையாகும். இன்று நாம் செய்கின்ற வழிபாடுகளும் சடங்குகளும் மக்களின் ஈடுபாட்டையும், பங்களிப்பையும் பெரும்பாலும் கொண்டிருப்பதில்லை.

அடையாளங்கள் ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் கலை கலாச்சாரம், மொழி, பாரம்பரியம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒரு வழிபாட்டில் அர்த்தமுள்ளவையாக மாறுகின்றன. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளது. பிற மதங் களில் உள்ள அடையாளங்கள், சடங்குகள் மற்றும் கலை கலாச்சாரங் களிலே நல்லவையென காணப்படும் யாவற்றையும் திருச்சபையானது பேணிக்காத்து வளர்க்க வேண்டும் என்ற உண்மையை தயக்கமின்றி, மிக ஆணித்தரமாக கூறுகின்றது.

## 7. தமிழ்ப் பண்பாடும் திருவழிபாடும்

தமிழ் மொழி, மதம், பண்பாடு ஆகியவை இயற்கையோடு மிக நெருங்கிய விதத்தில் இணைந்து காணப்படுகின்றன. தமிழர்களின் விழாக்கள் இயற்கை, காலத்தோடு இணைந்து காணப்படுகின்றன. பொங்கல், புத்தாண்டு விழாக்கள் இந்த உண்மையைத் தெட்டத்தெளி வாக காட்டி நிற்கின்றன. தமிழ் மக்களின் இறைப்பற்று தமிழர்களின் பல்வகை நிலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒவ் வொரு நிலப்பகுதிக்கும் ஓவ்வொரு தெய்வத்தை மையமாக வைத்து தமிழர்கள் வணங்கினர்கள். முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய் தல் ஆகிய ஐம்பெரும் நிலப்பகுதிகளுக்கும் வெவ்வேறு தெய்வங்களின் அடிப்படையில் விழாக்கள் எடுத்தனர். இதன்மூலம் தமிழன் ஆரம்ப காலத்தில் இருந்தே ஆழமான இறைப்பற்றுடன் வாழ்ந்தான் என்பது புலனுகின்றது,

தமிழ் மக்களின் வரலாற்றில் மதமும் பண்பாடும் இரண்டறக் கலந்திருப்பதை வரலாறு கூறி நிற்கின்றது. தமிழ்க் கிறிஸ்தவர்கள் இறைவனை வழிபட தமிழ்மரபில் வளர்ந்துவந்த பண்பாட்டையும், அடையாளங்களையும், சடங்கு முறைகளையும் பயன்படுத்துவதன்மூலம் வழிபாடுகளை அர்த்தமுள்ளவையாக மாற்றமுடியுமென்பது திண்ணம் தமிழன் என்ருல் இந்து என்று குறிக்குமளவிற்கு தமிழ்க் கிறிஸ்தவர்கள் தங்களைத் தாமே தம் சொந்த மண்ணில் அந்நியராக்கிக்கொண்டனர். தமிழ்க் கிறிஸ்தவர்கள் தமிழ் மொழியைக் கற்பதிலும் அதனை வளர்ப் பதிலும் ஆர்வம்காட்டி வந்தாலும் தமிழ்ப் பண்பாட்டைப் புனித மென காத்து வளர்க்கவில்லை. குறிப்பாக வழிபாடுகளைப் பொறுத்த மட்டில் ஐரோப்பிய அல்லது லத்தீன் வழிபாடுகளிலே நீண்டகாலமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கப்பட்டுவிட்டனர். இந்து மதச் சடங்குகளிலே அல்லது வழிபாடுகளிலே இரண்டறக்கலந்திருந்த தமிழ்ப் பண்பாட்டை குறைவுள்ளதொன்றாக அல்லது தவறு நிறைந்ததென்று மேற்கத்திய மறைப்பணியாளர்கள் நம் மக்களின் மனங்களிலே பதிய வைத்தார்கள். இவ்வித மான குறுகிய மனப்பான்மை இன்றும் தமிழ்க் கத்தோலிக்கர்கள் மத்தியிலே நிறைந்து காணப்படுகின்றது. அர்த்தமுள்ள பண்பாட்டு அடையாளங்களையும் திருவழிபாட்டில் புகுத்துவது தவறென்றே பலர் கருதுகின்றனர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திறந்துவைத்த பண்பாட்டின் கதவுகளை தமிழ்த் திருச்சபையானது மூடிவிட எத்தனிக்கிறது. பிற பண்பாடுகளை நல்லவையென்று பரந்த நோக்குடன் திருச்சபையின் கண்களை திறக்கச் செய்தாலும் நம் சொந்தப் பண்பாட்டையே சகிக்கமுடியாத அளவிற்கு தமிழ்த் திருச்சபையானது கண்களை மூடிக்கொள்கின்றது. மாற்றங்கள் வேண்டாமென்று ஒரு தலைச்சார்பாக வழிபாடுகளிலே அர்த்தமுள்ள அடையாளங்களைப் புகுத்துவதற்குப் பலர் முட்டுக்கட்டைகளாக விளங்குகின்றனர். அளப்பரிய செழிப்பு நிறைந்த பண்பாட்டுச் செல்வங்களை உடையவர்களாக இருந்தும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் இதனை அறியாமலும், திருவழிபாட்டில் பயன்படுத்தாமலும் இருப்பது வருந்தத்தக்கதாகும். எனவே தமிழர் பண்பாட்டைப்பற்றிய, கலை கலாச்சாரத்தைப்பற்றிய மேலும் இவற்றில் ஊறித்திளைத்து இரண்டறக்கலந்து விளங்கும் இந்து மதத்தைப்பற்றியும் ஆழமான அறிவையும் பரந்த நோக்கையும் கொண்டிருப்பது இன்றைய தமிழ்த் திருச்சபைக்கு இன்றியமையாததாகும். இதன் வழியாக அர்த்தமுள்ள அடையாளங்களை திருவழிபாட்டில் புகுத்தி கிறிஸ்தவ வாழ்வில் நாம் மறுமலர்ச்சியை காண முடியும்.

---

திருவழிபாடு தன்னகத்துள்ளவர்களை ஆண்டவரில் ஒரு தூய ஆலயமாகவும் தேவ ஆவிக்குள் கடவுளின் ஓர் உறைவிடமாகவும், கிறிஸ்துவினுடைய முழுப்பருவத்தின் அளவு வரையிலும் ஒவ்வொரு நாளும் கட்டியெழுப்புகின்றது.

திருவழிபாடு, கொள்கைத் திரட்டு (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடும் - பக்தி முயற்சிகளும்

திரு. எஸ். ஏ. நாதர் (மறை ஆசிரியர்)

## வழிபாடு என்றால் என்ன?

ஒவ்வொரு மனித உள்ளங்களிலும் ஊறித்திளைத்துவிட்ட தொன்று - வழிபாட்டு உணர்ச்சியாகும்! ஆதி மனிதன் தொட்டு - இன்றுவரை அவனது உள்ளங்களிலே ஒன்றிப்போய்விட்டதொன்று இது! மனிதன் தனக்கு 'அப்பாற்பட்ட' சக்திகளை - தன்னால் புரிந்துகொள்ள முடியாத - தான் விளங்கிக்கொள்ள முடியாத - ஒவ்வொன்றையும், தலைவனாக, ஏன்? 'கடவுளாக'! ''வழிபட்டான்'' அன்று! இதிலிருந்து தோன்றியவைதான் ''இயற்கை மதங்கள்''!!.

இருளின் அடிமைத்தனங்களில் வாழ்ந்த மக்களை ஒளிவாழ்விற்கு அழைத்த 'சூரியனை'யும் - வரட்சியின் கொடுமையிலிருந்து மீட்டு - வளர்ச்சியைத் தந்துதவிய 'மழை'யையும், வெப்பநிலையிலிருந்து 'தட்ப' நிலைக்கு மனிதனை வரவழைத்த 'காற்றை'யும், தனது அன்றாட 'பச்சை மாமிசத்தை' 'உருசி'யூட்டிக் கொடுத்த இயற்கை 'நெருப்பை'யும் - 'சூரிய பகவானாக', - 'வர்ண பகவனாக', - 'வாயு பகவானாக', - 'அக்கினி பகவானாக', இப்படி பல்வேறு பெயர்கொண்டு வழிபாடு செய்தான் ஆதி மனிதன்! - காரணம்:-? தன்னால் புரிய - அறிய தெரிந்துகொள்ள முடியாத ஆற்றல்கள் அனைத்தையும் 'தெய்வம்' எனப் போற்றினான்.

அது மட்டுமல்ல! தனக்கு கெடுதி விளைவிக்கும் 'தீய சக்திகளையும்' கடவுள் எனப்போற்றி வழிபட்டான். (உ-ம்) 'பாம்பு' - காரணம்? பயம்!!!

வழிபாடுகள் பக்தியினாலும் - பயத்தினாலும் மனித மனங்களில் தோன்றியவை.

## ஒரே கடவுள் தன்மை தோன்றியது எவ்வாறு?

காலம் செல்லச் செல்ல மனிதனின் சிந்தனை ஓட்டங்கள், 'இவைகள் எல்லாம் இயற்கையின் சக்திகளே'! இவைகள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஒருவர் இருக்கின்றார் - மட்டுமல்ல, இயக்குகின்றார்! என்ற உண்மைத் தத்துவத்தை ஏற்றான்! சமூகம் வளர சமுதாயம் மாறவேண்டும் தானே? இவைகள் அனைத்தும் இயற்கை நிகழ்வுகள்! இவற்றிற்கும் மேலாக - இவை அனைத்தையும் ஆட்டிப்படைக்கும் இன்னொருவர் இருக்கின்றார்! அவர் யார்? என்று தேடி - கண்டுபிடிக்க முனைந்தான் மனிதன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! உண்மைக் கடவுளை - தன்னை உருவாக்கியவரை - பல கோணங்களில் பார்க்க விரும்பாது - ஒரே கோணத்திலே காண முனைப் பட்டான் மனிதன்! ஏனெனில்? 'இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது' என்ற யேசுவின் பொன்மொழியை முன் உணர்ந்தனரோ என்னவோ...?

## ஒரே கடவுள் கொள்கை!

குல முதுவர்களில் - பெருமுதல்வராம் 'ஆபிரகாமை' இறை வன் அழைத்தபோது - 'நீ உன் இனத்தையும் - நாட்டையும் - நில புலன் களையும் விட்டு நான் காட்டும் இடத்திற்கு வா'! என அழைப்பு விடுத் தார்! உடனடியாகப் புறப்பட்ட ஆபிரகாம் 'நான் தயார்' என்று சொல்லிப் பின் செல்லுகிறார்.

இது 'என்னைப் பின் செல்ல விரும்புகின்றவன் தன் தாய், தந்தை, சகோதரர்கள் - நிலபுலன்களை - விட்டுவிட்டு வருகிறவன் 100 மடங்கு பலன் பெறுவான்' என்று யேசுவின் வார்த்தைக்கு இவர் முன் உதா ரணம் இல்லையா?...?

## திருவழிபாடு தோன்றியது எப்போது? ?

இறைவன் மோயீசனை அழைத்து 'சீனாய் உடன்படிக்கை' செய்த போது, - 'நாமே உன் தந்தை - நீங்கள் என் மக்கள் - இந்த உடன் படிக்கை நிறைவேற வேண்டுமானால் பின்வரும் சட்டதிட்டங்களைக் கடைப்பிடியுங்கள்' என்று திட்டம் வகுத்துக்கொடுத்தாரே! - அன்று வழிபாட்டில் இருக்க வேண்டிய ஒழுங்குமுறைகளை 'கல்லேட்டில்' பதித் துக் கொடுத்தனர். இதனை மீறியவர்களை, கொடும் தண்டனைகளுக்கு ஆளாக்கினர்.

பாரம்பரியமாக நடைபெற்றுவந்த இந்த திருவழிபாட்டை, முற் றும் முழுதாக மாற்றியமைத்தவர் எம் பெருமான் யேசு!

## திருவழிபாடு! - அது? ஒரு புதுவழிபாடு!

சட்டங்களையோ - இறைவாக்குகளையோ நான் அழிக்க வரவில்லை- நிறைவேற்றவே வந்தேன்' என்று தன் பணிவாழ்வைத் தொடக்கிவைத்த இறைமகன் யேசு, இலக்கணத்திற்கு ஒரு புது இலக்கியம் வகுத்தவர். அவர் தன்னை முற்றுமுழுதாக வெளிப்படுத்தும்போது பழைய ஏற்பாட்டு சட்டங்களுக்கு ஒரு புதிய திட்டம் வகுத்துத் தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாரியப் பெண்ணிடம் அவர் உரையாடும்போது மூட நம்பிக்கைகளை - ஆசார முறைமைகளை உடைத்தெறிந்து புது மெருகூட்டுகின்றார்! எப்படி?

நேரம் வருகிறது - ஏன் வந்தேவிட்டது. அப்போது மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பரம தந்தையைத் தொழுவார்கள்! ஏனெனில் தம்மைத் தொழும்படி தந்தை இத்தகையோரையே தேடுகின்றார்! கடவுள் ஆவியானவர்! ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும்தான் அவரைத் தொழுதல் வேண்டும் என்றார்' (அரு 2;24).

ஆம்! நமது திருவழிபாட்டிலே ஆவியிலும் உண்மையிலும் நாம் இறைவனைத் தொழுகின்றோமா? அல்லது சம்பிரதாயப்படி செயல்படுகின்றோமா? சற்று சிந்திப்போமா??

## வழிபாடுகள் வேறு - பக்தி முயற்சிகள் வேறு!

வழிபடுதல் என்பது - 'வழி செல்லல்' என்றே பொருள்படும். 'என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன் சிலுவையைத் தானே சுமந்து கொண்டு என் பின்னே வரட்டும்' என்ற யேசுவின் அறைகூவல் அவர் 'வழி செல்ல' எமக்கு அழைப்பு விடுகின்றார்! 'என்னைக் காண்கின்றவன் தந்தையையே காணுகின்றான். நானும் தந்தையும் ஒன்று! உன்னால் நம்ப முடியாவிடின் என் செயல்களின் பொருட்டாவது 'நீ என்னை விசுவாசி' என்று பிலிப்புவின் சந்தேகத்தை போக்கிவைத்து 'தானே மெய்யங்கடவுள்' என்பதைத் தெட்டத்தெளிவாக திட்டவட்டமாகக் கூறிவைக்கின்றார்.

இதிலிருந்து வழிபாடு என்பது இறைவனுக்கு மட்டுமே உரிய ஒன்றாகும். அது ''இறைமகன் யேசுவுக்கு மட்டும்'' உரித்தானதொன்று என்பது தெட்டத்தெளிவு.

## நமது கிறிஸ்தவ சமுதாயத்தின் கண்ணோக்கு!

இன்றைய காலகட்டத்திலே எமது கத்தோலிக்க சமுதாயத்தை கேலி செய்கிறார்கள் நமது புறமத சகோதரர்கள். காரணம்:-? நமது பக்தி முயற்சிகள் அனைத்தும் உயிருள்ள இறைமகனின் பக்கம்செல்லாது வெறும் உருவச்சிலைகளில் மட்டும் நாம் கவனம் செலுத்துகின்றோம். சிலைகள் - சிற்பங்கள் வணங்குவதற்கும் மரியாதை செலுத்தப்படுவதற்குமுரிய ஒன்றேயொழிய வழிபாட்டுக்குரிய ஒன்றல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நமது 'பெருந்தன்மை மிக்க' கிறிஸ்தவ குலமோ புனிதர்களின் சிலைகளில் காட்டும் அக்கறை உயிர்த்த யேசுவில், 'உயிருள்ள அப்பத்தில்' காட்டுவது இல்லை. கோவில் திருவிழாவில் 'கொடிச்சேலை' தற்செயலாக அறுந்து விழுந்துவிட்டால் - உருவச்சிலைகளின்மீது இருக்கும் தங்கத் தகடோ, வெள்ளித் தகடோ தற்செயலாக தவறி வீழ்ந்து விட்டால், 'அது நமது கிராமத்துக்கே சாபக்கேடு' என்று எண்ணி மனமுடைந்து போகின்றோம் இல்லையா?

அதேவேளையிலே நமது ஆலயத்திலுள்ள நற்கருணை அதாவது உயிர்த்த யேசு உயிருடன் களவாடப்படும்போது அவர் உயிருடன் குப்பைமேட்டில் வீசப்பட்டிருக்கின்றாரா அல்லது சாக்கடையில் மிதந்து செல்லுகின்றாரா என்பதைப்பற்றி நாம் என்றாவது கவலைப்படுவது உண்டா???

நம் மனதை வாட்டுவது அனைத்தும் அழகான பாத்திரம், பெறுமதி மிக்க பாத்திரம் களவாடப்பட்டுள்ளதே என்று சொல்லி கவலைப்படுகின்றோமே தவிர, உயிர்த்த யேசு உதாசீனப்படுத்தப்பட்டுள்ளாரே என்று என்றாவது கவலைப்படுகின்றோமா - - இல்லையே!!!

நமது வழிபாடுகளும் - பக்தி முயற்சிகளும் உண்மை இறைவனில் - உயிருள்ள கிறிஸ்துவில் தங்கியிருக்க முயற்சிப்போம்.

புனிதர்கள் வணக்கத்திற்கும் - மரியாதைக்கும் உகந்தவர்களே என்பதை மனதில் எண்ணி 'வணக்கம் வேறு' - வழிபாடு வேறு' என்ற உண்மை நிலையைக் கண்டுணர்ந்து எம்மை நோக்கி எதிர்ச் சவால்விடும் ஏனைய பிரிவினை சகோதரர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்வோம் - வளர்வோம்!

---

கிறிஸ்தவ மக்களின் பக்தி முயற்சிகள் திருச்சபையின் சடங்குகளுக்கும் விதிகளுக்கும் இசைந்திருப்பின், சிறப்பாக அவை மறைத்தூது ஆட்சிப் பீடத்தின் கட்டளைப்படி நிகழுமாயின் மிகவும் ஆதரிக்கத்தக்கன.

திருவழிபாடு கொள்கைத்திரட்டு (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*SYNOPSIS*

## LITURGY IS THE SOURCE AND CULMINATION OF CHRISTIAN LIFE

*FR. A. J. V. CHANDRAKANTHAN (University, Jaffna)*

Liturgy should be relevant to life This was the main thrus in the constitution on the liturgy of Vatican II. Even before the second Vatican council the reform or renewal of liturgy was inaugurated in France and Germany. A deep spiritual life is possible only through a genuine liturgical renewal. We see clearly that there was a close link between the lives and the liturgy of the early christian community. They offered their own lives as sacrifices (Rom. 12:1-2). Everything was done for the glory of the Lord (1 Cor. 10:31). Our faith is to be expressed not only in liturgy but also in life. Faith, life and liturgy are closely linked and they should not be separated from each other. The Eucharistic celebration is the centre of all liturgy. It is the sign of love and unity. So too all the other sacraments are linked up in life. They are sings of our faith. They should renew our lives and make us new. ★

## WORD OF GOD IN LITURGY

*MR. E. M. JEYASEELAN (Catechist)*

The word was made flesh (Jn. 1-14). God's presence was made visible through the incarnation of Jesus. Liturgy is an encounter between God and man. The early christian community shared the word of God very regularly before breaking the bread. During the Eucharistic Liturgy we listen to God's word and become united with Him.

The various reasons of the liturgical year are based on the word of God which is showed according to the themes of the seasons. The second Vatican council gives due importance to the word of God. especially in the celebration of the sacraments. Sacraments are sings of faith and it is through the word of God that we can strengthen our faith. While revising the rituals for various blessings, the church has inserted the word of God in order to foster true faith. The various liturgical hymns we use are based on the word of God. Thus the word of God play a vital role in the liturgical celebrations. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE ROLE OF THE CHOIR IN OUR LITURGY

*BRO. C. J. ANTONY BALA*

Every liturgical celebration is a sacred action by means of which the sanctification of men in Christ and the glorification of God are most powerfully achieved. Singing psalms, bhajans, and hymns is usual adapted musical form of liturgy which elavates man's heart to God. But in certain parishes the lack of facilities for the development of the choir has become a hindrance to the devotion of the people. Our talented singers, musicians and composers are unable to express the pulse of the people in their creations, according to the present milieu of the people; for this the recognition and encouragement of the composers and the musicians ar necessary t the Diocesan level. Meanwhile, at the parish level we should provide for adult catechetics and the enrichment of choir members with catholic teachings and various other means for suitable singing. Seminaries, religious societies and religious institutes should contribute to this issue in their own way. ★

## RENEWAL IN THE LITURGY ACCORDING TO VATICAN II

*BRO. A. VICTOR SOSAI*

In order that the people may take part in the liturgy actively, fully and consciously, Second Vatican council demanded an urgent renewal in the Sacred liturgy. Renewal means a return to the original so.rce in order to regain vitality and life. It means to acquire newness. Liturgy as re-enactment of christ's saving death and resurrection, ought to be done by adapting the liturgical sings to the changed situation of the world. Even though various areas were discovered for the renewal, certain sections occupied the central place. While exhorting an enthusiastic participation in the liturgy, it rejected the tendency of compartmentalizing life and liturgy. Further by laying a great emphasis on the comm ni-tarian aspect of liturgy, the council opened up the possibilities for adapting cultural values Thus this process becomes inevitable for it is here christianity can receive an Asian identity. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IMPORTANCE OF SIGNS IN LITURGY

*REV. FR. J. NICHOLAS*

Signs are essential vehicles to convey the truth. They are also means for communication and to build up friendship and fellowship. Signs reveal interior person. In the Old Testament God revealed Himself through signs. When time came God revealed His eternal love through His son Jesus Christ. Jesus became the sign of God's kingdom. Thus Jesus is the primodial Sacrament of salvation. The church is the sign of salvation in the world. The church continues the salvific mission of Jesus Christ through the sacraments which are signs of salvation.

The liturgical signs should be relevant and meaningful to the people. In order to achieve this purpose, we ought to give due importance to the cultural signs of each local church. It is a fact that tamil christians have been estranged from their cultural symbols with regard to liturgy. The voice of Vatican II to respect and to foster whatever good found in other religions and cultures needs to be heard with open ears by the tamil christians. The richness of tamil culture and its values are to be studied with more seriousness especially by the tamil christians. ★

## LITURGY AND DEVOTIONS

*MR. S. AROKIANATHER (Catechist)*

The primitive man began to worship fire and natural phenomenon as gods. The Israelites believed in Yaweh, the one true God because of His revelation. Thus we have the example of Abraham and other Patriarchs who preserved their faith in Yaweh. They offered sacrifices and continued to grow in their faith through cultic rituals.

Jesus came to fulfill what was lacking in rituals of the old Testament offered himself for expeiations of sins. It was the perfect sacrifice - a sacrifice of redemption. A Liturgical worship can be offered to God alone. The veneration of saints cannot become a substitute for a liturgical worship. It is a fact that many catholics give more importance to the veneration of saints than to liturgical worship. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஆக்கங்கள்...

கீழ்க்காணும் மையப்பொருள்கள் அடங்கிய தலைப்புகளில் அல்லது வேறு பொருத்தமான தலைப்புகளில் உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

(பெரிய தாளில் எட்டுப் பக்கங்கள் உட்பட எழுதவும்).

## செப்டம்பர் 1989: **பண்பாட்டு மயமாக்கல்**

**வடிவம் 5** **வண்ணம் 5**

1. பண்பாட்டின் அவசியம்
2. நற்செய்தியும் பண்பாடும்
3. பண்பாட்டின் அடிப்படை: கிறிஸ்து மனுவுடல் எடுத்தல்
4. பண்பாடும் 2ம் வத்திக்கான் சங்கமும்
5. மக்களின் வறுமையும் பண்பாடும்
6. விசுவாச வளர்ச்சியும் பண்பாடும்
7. தமிழ்ப்பண்பாடும் கிறிஸ்தவமும்
8. பண்பாடும் இன்றைய இறையிலாளர்களும்
9. பண்பாடும் விடுதலையும்

## டிசம்பர் 1989: **கிறிஸ்தவ ஒன்றிப்பும் உரையாடலும்**

**வடிவம் 5** **வண்ணம் 6**

1. வரலாற்றில் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகள்
2. 2ம் வத்திக்கான் சங்கமும் கிறிஸ்தவ ஒன்றிப்பும்
3. உலக திருச்சபைகள் சம்மேளனமும் (WCC) அதன் வளர்ச்சியும்
4. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு எதிரான தடைகளும், பிரச்சினைகளும்
5. உரையாடல் ஏன் அவசியம்
6. 2ம் வத்திக்கான் சங்கமும் உரையாடலும்
7. திருச்சபையும் பிறமறைகளும்
8. தமிழ்த்திருச்சபையும் உரையாடலும்
9. உரையாடலும் இன்றைய இறையிலாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org